# மறை ஞானப்பேழை

சத்தியம் வந்துவிட்டது !

அசத்தியம் அழிந்து விட்டது !

நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும் !

September 2022 செப்டம்பர் 2022













Retail Selling Price 25

Volume - 15, Issue - 7

# வெளிவந்துவிட்டது!

நாம் மிக ஆவலோடு எதிர்பார்த்திருந்த

**அல் – இக்துத் தராரீ ஃபீ ஷரஹிஸ்**

# ஸஹீஹி லில் இமாமில் புகாரீ

(முதல் பாகம்)



சங்கைமிகு குத்புல் ஃபரீத்,

ஜமாலிய்யா அஸ்ஸையித்

யாஸீன் மௌலானா (ரலி)

அவர்கள் அறபு மொழியில் ஆக்கியது.

**விலை ரூ. 1000/ – மட்டும் – (கொரியர் செலவு தனி.)**

**தொடர்புக்கு : 99437 86269 - 99445 76165**

---

## மறைஞானப் பேழை சந்தா விபரம்

| | |
|---|---|
| உள்நாடு ஓராண்டுச் சந்தா | ரூ. **300/-** |
| வெளிநாடு ஓராண்டுச் சந்தா | ரூ. **3000 /-** |

---

**சந்தாத் தொகை அனுப்ப, முகவரி மாற்றம், மற்ற விபரங்கள் அறிய**

**தெதொடர்பு கொள்ள வேண்டிய கை பேசி எண்கள்.**

**Cell : 9597912410 - 9944576165**

---

## விளம்பரக்கட்டணம்

| | ரூபாய் |
|---|---|
| முழுப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 1000 |
| முழுப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 10000 |
| அரைப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 600 |
| அரைப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 5000 |
| கால் பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 500 |
| கால் பக்கம் (ஆண்டு முழுவதும்) | 4000 |

# Be in all and get the power of God

## ஆன்மிக மாத இதழ்

**வெளியிடுவோர்**
அவ்னிய்யா உலக அமைதி அறக்கட்டளை
பாகிரா காம்ப்ளக்ஸ்74, பழனிரோடு.
திண்டுக்கல் - 624 001.

**நிறுவனர்**
குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் வுஜூத், ஜமாலிய்யா
அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா
நாயகம் அவர்கள்.

**ஆசிரியர்**
கலீஃபா. S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ

**சிறப்பாசிரியர்**
கலீஃபா. A.N.M. லியாகத் அலி, B.Sc., B.L.,

**வெளியீட்டாளர்**
J. முஹம்மது ரஹ்மத்துல்லாஹ், B.A.,B.Com.,

**அச்சிட்டோர்**
R. விஜயலட்சுமி
ஸ்ரீ அக்னி அம்மன் அச்சகம்,
52, பழனிரோடு, திண்டுக்கல்.

**கணினி அச்சுக் கோவை**
ரிப்தா கம்ப்யூட்டர்ஸ் செல்: 99445 76165



செய்திகள் அனுப்பவேண்டிய முகவரி

**S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ**
**கலீல் கம்ப்யூட்டர் கல்வி மையம்**
229/ 4, மீரா காம்ப்ளக்ஸ், மேற்கு ரத வீதி,
ஃபயர் சர்வீஸ் எதிரில், திண்டுக்கல் - 624 001.
CELL : 99445 76165
Website:www.emsabai.org
email: aalimpulavar07@ gmail.com
email: j.mdrahmathulla@yahoo.com


# மறை ஞானப் பேழை


முஹர்ரம் - ஸஃபர்

செப்டம்பர் 2022
Volume - 14 Issue - 7


## பேழைக்குள்......


ஜமாலிய்யா தோட்டத்தில்.....
திருமறைப் பக்கம்.
ஹதீஸ் பக்கம்.
அமுத மொழிகள்.
நற்குணத்தின் தாயகம்
ஜகரிய்யா ஆலிம் (ரஹ்)
கல்வத்து நாயகம் (ரலி)
Goodbye Big Bang! (ஆங்கிலம்)
புனித பாரம்பரியம்
தஃப்ஸீர் ரூஹுல் பயான்.
கர்பலா விழா.
மெய்யொளி வீசிய போது....
இனிக்கும் இறைமொழி!
காஜா பந்தா நவாஸ் (ரஹ்)
மற்றும் வழக்கமான தொடர்கள்.

# கூடுவோம் ! கொண்டாடுவோம்!

காலத்தின் முதல் வசந்தமான மீலாது மாதம் மலர்கிறது.

ஆருயிர் அண்ணல் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அதிமதிகம் நினைக்கும் பாக்கியத்தை அள்ளித்தரும் அருள்மிகு மாதம் இது.

இந்த மாதத்தை கௌரவிக்கும் விதமாக முப்பது நாட்களும் அண்ணலாரின் புகழ் பாடும் மௌலிது ஷரீபை இல்லங்களில் ஓதி, மஹல்லாக்களில் மீலாதுப் பெருவிழாவை நடத்துவதுடன், கந்தூரியையும் கொடுக்கும் அழகிய வழிமுறையைக் கற்றுத் தந்தவர்கள் நம் அருமை குருநாதர் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா நாயகம் அவர்கள்.

நமக்குப் பெருநாட்கள் இரண்டு மட்டுமல்ல – பெருமானார் அவதரித்த நாளோடு மூன்று பெருநாட்களாகும் என முழங்கியவர்கள் அவர்கள்.

வார்த்தையில் உபதேசித்தது மட்டுமல்ல வாழ்க்கையில் நடத்தியும் காட்டிவருகிறவர்கள் அவர்கள்.

ஷைகு நாயகம் அவர்களின் அறிவுரையை மனதில் தாங்கி அவர்களின் முரீதுப் பிள்ளைகள் ஆண்டு தோறும் இடைவிடாமல் செய்து, தங்களுக்கும் தங்கள் ஊருக்கும் பாக்கியத்தையும் பாதுகாப்பையும் சேர்த்து வருகின்றார்கள்.

அது மட்டுமல்ல. அண்ணலாரின் அருள் வாழ்க்கையை அனைவரும் அறிந்து கொள்ள ஆர்வமேற்படுத்தும் நோக்கில் – நேரிலும் இணையத்திலும் கேள்வி பதில் போட்டிகளை ஏற்படுத்தி பல்லாயிரக்கணக்கான ரூபாய் பரிசுகளை பரிசாக வழங்கி அருள் சேவை செய்து வருகிறார்கள்.

மேலும், காலத்திற்கேற்றவாறு ஆடியோ வீடியோ வடிவில் பெருமானார் புகழினைப் பரப்பி வருகிறார்கள்.

அந்த வகையில், இந்த ஆண்டும் சபை உள்ள ஊர்களில் மீலாதுத் திருவிழாவைக் கொண்டாடுவதோடு, நமது தரீகாவின் கேந்திரமான திருச்சி மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரியில் மாபெரும் மீலாது விழா கொண்டாட உள்ளோம்.

உலகளாவிய ஏகத்துவ மெய்ஞ்ஞானசபை சார்பில் நடைபெறும் இவ்விழாவில் தமிழகத்தின் மிகப்பெரும் உலமாக்கள், பேச்சாளர்கள், அரசியல் பிரமுகர்கள் பங்கேற்க உள்ளனர். இணையவழிப் போட்டியில் வென்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட வுள்ளன.

நாம் பெறும் இப்பேறுகளை நம்மைச் சுற்றியுள்ளவர்களும் பெற வேண்டும் என்ற நோக்கில் முரீதுகள் தங்கள் ஊர்களிலிருந்து தங்கள் உறவினர்களை– நண்பர்களை நபி நேசர்களை– ஜமாஅத்தார்களை– அழைத்து வரவேண்டும்! அல்லாஹ் இந்த விழாவினை வெற்றிபெறச் செய்வானாக !

*மறைஞானப் பேழை நிறுவனர்*

**அஷ்ஷைகுல் காமில்**

**குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத்**

**ஜமாலிய்யா**

**அஸ்ஸய்யிது கலீல் அவ்ன் மௌலானா**

**அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள்**



அல்லாஹ்–அதாவது –இயற்கை சிந்தித்தது. மனிதனாக –மாறினேன். மனிதனாக மாறியபின் மனிதனின் நிலை பெரும் அநியாயமாக இருக்கின்றதே !

இஃது எப்படியாவது திருந்தி அமைய வேண்டுமே என்பதற்காக வேண்டி முக்கியமான ஒன்றை ரசூல் (ஸல்) அவர்களை ஹக்கு ஸுப்ஹானதஆலா வெளியாக்கியது ! அந்த இயற்கையாகவே அது வெளியாயிற்று. வெளியான பின் சிந்திக்கின்றது ! எல்லா மனிதர்களையும் திருத்த வேண்டும்; நேர்மையாக வாழச் செய்ய வேண்டும் என நினைத்து இம்மாதிரியான நிலைக்கு வந்தது.

*- சங்கைமிகு ஷைகு நாயகம் அவர்கள் -*

ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் வாழ்ந்த ஸஹாபாக்கள் அல்லாஹ்விற்குக் கொடுக்காத நிலையைக் கூட ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

ஓர் ஏழை ஸஹாபி ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து தமது தேவையை முறையிட்டார். அப்போது ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மற்றொரு (செல்வந்தரான) ஸஹாபியிடம் சென்று அல்லாஹ்விற்காக உதவி செய்யும்படிக் கோருவீராக என அனுப்பி வைத்தார்கள்.

அந்த ஸஹாபி அவ்வாறு சென்று கேட்டதும் (செல்வந்தரான) ஸஹாபி "சிறிய அளவு" பணமளித்தார். ஏமாற்றத்துடன் திரும்பிய ஏழை ஸஹாபி, "யாரசூலல்லாஹ் ! இஃது எனது தேவையைப் பூர்த்தியாக்காது" என்றார். அப்போது ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மீண்டும் அந்த (ஏழை) ஸஹாபியை அதே (செல்வந்தரான) ஸஹாபிடம் அனுப்பி, "ரசூலல்லாஹ்விற்காக" உதவுங்கள் எனக்கூறி அனுப்பினார்கள்.

அவ்வாறே ஏழை ஸஹாபி சென்று கேட்ட போது, செல்வந்தரான ஸஹாபி தம்மிடமிருந்த செல்வமனைத்தையும் அளித்து விட்டார்!

இதிலிருந்து நாம் என்ன விளங்குகின்றோம் என்றால்....

"அல்லாஹ்வைக் காட்டிக் கொடுத்தவர்கள் பெரியவர்கள்–சக்தியைக் காட்டிக் கொடுத்தவர்கள் பெரியவர்கள்" என்பது தான்!

**வணக்கம் வேறு; மரியாதை வேறு !**

ஆனால் அல்லாஹ்வை வணங்கக்கூடிய விஷயம் வேறு ! அல்லாஹ்வைக் காட்டித்தந்த ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு செலுத்தக் கூடிய மரியாதை வேறு ! ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே சொன்னார்கள் : "நீங்கள் என்னை வணங்க வேண்டாம்" என்று.

ஏனைய நபிமார்களும் இவ்வாறே சொல்லியும் அன்னவர்களை மக்கள் வணங்கினர் ! ஆனால், ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "என்னை வணங்க வேண்டாம்" எனக் கூறியிருக்கிறார்கள்.

அல்லாஹுத ஆலாவை ரசூல்ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காட்டித் தந்தார்கள்: என்னை "வணங்காதீர்கள் என்றார்கள்! "நான் மனிதன்" என்றார்கள்.

*- சங்கைமிகு ஷைகு நாயகம் அவர்கள் -*

# தாஜீத் தர்ஜீமா
# மொழி பெயர்ப்புகளின் மகுடம்

## 1. பாத்திஹா அத்தியாயம்

1. கருணாகரனும் காருண்யனுமான அல்லாஹு தஆலாவின் (திருப்) பெயர் கொண்டு (இதனைத்) தொடங்குகிறேன்.

2. அகிலம் யாவையும் (அவற்றுள் உள்ள சிருஷ்டிகள் அனைத்தையும்) வளர்த்து (ப் பாதுகாத்து) வருகின்ற அல்லா(ஹ்)வுக்கே எல்லாப் புகழும்.

3. கருணாகர காருண்யனானவன்.

(சம்பூரண அன்புடையோன்; பிரத்தியேக பக்த தயாளு)

4. தீர்ப்பு நாளின் அதிபதி.

5. உன்னையே வணங்குகின்றோம். உன்னிடமே உதவி தேடுகின்றோம்.

6. எமக்கு நேர் வழியைக் காட்டியருள்.

7. நீ எவர்கள் மீது அருள் பொழிந்தாயோ (அவர்கள் சென்ற) அவர்களுடைய நேர்வழியை (எமக்குக் காட்டியருள்.)

உனது கோபாக்கினி இறங்காத அன்னவர்களுடையவும் நெறி பிறழாத அன்னவர்களுடையவும் (நேர்வழியைக் காட்டியருள்)

சங்கைமிகுசெய்கு நாயகம்
அவர்களின் மொழி பெயர்ப்பு.

---

1. அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

2. எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. (அவன் தான்) அகிலத்தார் அனைவரையும் படைத்து வளர்த்து தகுந்த பக்குவப்படுத்துபவன்.

3. (அவன்தான்) அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையவன்.

4. தீர்ப்பு நாளின் அதிபதியும் அவனே).

5. (அல்லாஹ்வே) நாங்கள் உன்னையே வணங்குகிறோம் உன்னிடமே உதவி தேடுகிறோம்.

6. நீ எங்களை நேரான வழியில் நடத்துவாயாக.

7. (அவ்வழி) எவர்களுக்கு நீ அருள் புரிந்தாயோ அவர்கள் (சென்ற) வழி. (உன்) கோபத்திற்குள்ளானவர்களோ வழிதவறியவர்களோ சென்ற வழியல்ல.

அல்லாமா அப்துல் ஹமீது பாகவி

அவர்களின் மொழி பெயர்ப்பு.

---

அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப்பெயரால்...

1-3 எல்லாப் புகழும் அனைத்துலகிற்கும் ரப் ஆகிய அல்லாஹ்வுக்கே உரியதாகும். அவன் மாபெருங் கருணையாளனாகவும், தனிப்பெருங் கிருபையாளனாகவும், இறுதித் தீர்ப்புநாளின் அதிபதியாகவும் இருக்கின்றான்.

4. உனக்கே நாங்கள் அடிபணிகிறோம். (இபாதத் செய்கிறோம்.) மேலும், உன்னிடமே நாங்கள் உதவி கேட்கிறோம்.

5-7 எங்களுக்கு நீ நேரான வழியைக் காண்பித்தருள்வாயாக (அவ்வழி) எவர்களுக்கு நீ அருள் புரிந்தாயோ அவர்களின் வழி. உன்னுடைய கோபத்துக்கு ஆளாகாத மற்றும் நெறிதவறிப் போகாதவர்களின் வழி.

இஸ்லாமிக் பவுண்டேசன்

டிரஸ்டின் மொழி பெயர்ப்பு.

---

ஸூரத்துல் ஃபாத்திஹா எனப்படும் அல்ஹம்து ஸூராவுக்கு வாப்பா நாயகம் அவர்கள் செய்த மொழி பெயர்ப்பையும் மற்ற இரண்டு மொழி பெயர்ப்புகளையும் படித்து சிறப்புகளை உணர்ந்து கொள்ளுங்கள்.



# நபி மொழி நாற்பது

ஹதீஸ் பக்கம்

1. ஒரு முஃமின்(மற்றொரு) முஃமினுக்கு கண்ணாடியாக இருக்கின்றார்.
*(நூல் ; அபூதாவூத்)*

2. எவரின் மூலம் மக்களில் பொருள்களும் உயிர்களும் பாதுகாக்கப்படுகின்றதோ அவரே முஃமினாவார்.

*(நூல் : நஸஈ)*

3. எல்லாரைக் காட்டிலும் நல்ல குணமுடையவராகவும் தன் வீட்டாரிடம் மிருதுவாக யார்நடந்து கொள்வாரோ அவரே பரிபூரணமான முஃமினாவார்.
*(நூல் : திர்மிதீ)*

4. சக்திவாய்ந்த முஃமின் பலகீனமான முஃமினை அல்லாஹ்விடத்தில் சிறந்தவராகவும் பிரியமானவரகவும் இருக்கின்றார். *(நூல் ; முஸ்லிம்)*

5. சுவர்கத்தின் திறவுகோல் தொழுகையாகும். மேலும் தொழுகையின் திறவுகோல் சுத்தமாகும். *(நூல் : அஹ்மது)*

6. அல்லாஹ்வுக்கு மாறு செய்யும் விஷயத்தில் (யாருக்கும்) வழிபடக் கூடாது.
*(நூல் : அபூதாவூத்)*

7. உலகம் முஃமினுடைய சிறைச்சாலையாகவும் காபிரின் சுவர்க்கமாகவும் இருக்கின்றது *(நூல் : முஸ்லிம்)*

8. அமல் நல்லதாகவும் அதிக வயது வாழ்பவராகவும் எவர் இருக்கின்றாரோ அவரே மக்களில் சிறந்தவராகும். *(நூல் ; திர்மிதீ)*

9. இடங்களில் அல்லாஹ்வுக்கு மிகப்பிரியான இடம் மஸ்ஜித்களாகும். அல்லாஹ்விடத்தில் மிக வெறுப்பான இடம் கடை வீதிகளாகும். *(நூல் : முஸ்லிம்)*

10. தன் நஃப்ஸூடன் போரிடுபவனே (உண்மையான) வீரனாவான்
*(நூல் : திர்மிதீ)*

11. கடுகளவு பெருமை எவனது உள்ளத்தில் உள்ளதோ அவன் சுவர்க்கத்தில் நுழையமாட்டான். *(நூல் ; முஸ்லிம்)*

12. உலகில் அந்நியரைப் போன்று அல்லது வழிப்போக்கனைப் போன்று இருங்கள். *(நூல் : புகாரி)*

13.(உண்மையானதா பொய்யானதா என்று ஆராயாமல்) கேட்பதையெல்லாம் கூறிவிடுவது ஒரு மனிதன் பொய்யனாவதற்கு இதுவே போதுமானதாகும். *(நூல் : முஸ்லிம்)* *(மீதி 15 ஆம் பக்கம் பார்க்க...)*

# திருக்குறள்

**இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை**
**எல்லாரும் செய்வர் சிறப்பு**

பொருள் இல்லாத வறியவரை எல்லாருமே இகழ்ச்சியாகப் பேசுவார்கள். செல்வம் உடையவரையோ எல்லாரும் சிறப்புச் செய்து போற்றுவார்கள்.

---

## இரு மாதச் சிறப்பு தினங்கள்

**பிறை**

مُحَرَّم

**முஹர்ரம்**

| | |
|---|---|
| 1. | ஹிஜ்ரீ புத்தாண்டு பிறப்பு |
| 4. | ஹஸன் பஸரீ (ரலி) உதயம் |
| 5. | பாபா ஃபரீதுத்தீன் கன்ஸெ ஷக்கர் (ரஹ்) மறைவு |
| 6. | ஜகரிய்யா (அலை) மறைவு |
| 10. | இமாம் ஹுஸைன் (ரலி) ஷஹீது |
| 10. | ஆஷூரா தினம் |
| 18. | இமாம் ஜைனுல் ஆபிதீன் (ரலி) மறைவு |
| 29. | ஷாஹ் வலிய்யுல்லாஹ் (ரஹ்) மறைவு |

---

صَفَر

**ஸஃபர்**

| | |
|---|---|
| 5 | ஸதக்கத்துல்லா அப்பா (ரஹ்) மறைவு |
| 10 | கமுதி முஸாபிர் வலி (ரஹ்) உரூஸ் |
| 14 | காயல் தைக்கா சாஹிபு (ரஹ்) மறைவு |
| 17 | கொடிக்கால் பாளையம் அப்துல் மஜீது ஸூஃபி (ரஹ்) உரூஸ் |
| 28 | இமாம் ஹஸன் (ரலி) ஷஹீது |

---

வாசக அன்பர்களே! மறைஞானப் பேழை சந்தா புதுப்பித்து விட்டீர்களா? **மறைஞானப் பேழை சந்தா அனுப்பவேண்டிய வங்கிக் கணக்கு எண்:**

**HUSSAIN MUHAMMAD.S. & JAHIR HUSSAIN.A**
**Indian Overseas Bank, SB A/c No. 20980100025255.**
**IFSC Code.IOBA 0002098**
**Branch- RM COLONY. DINDIGUL**

**பெயர் – முகவரி** பணம் அனுப்பியவுடன் தயவுசெய்து இந்த எண்களில் ஒன்றைத் தொடர்பு கொண்டு தெரியப்படுத்துங்கள்.

**A. JAHIR HUSSAIN. 9597912410 - 9944576165**

சங்கைமிகு ஷைகு
நாயகம் அவர்களின்



# அமுத மொழிகள்

## மீலாது கந்தூரி சிறப்பாகச் செய்ய வேண்டும்.

ஓர் ஊரில் ஒரு முரீத் இருந்தாலும், அவர் ரபீஉல் அவ்வல் மாதம் முழுவதும் புனித மவ்லூது ஷரீபை ஓதி, கந்தூரி கொடுத்து அந்த மாதத்தைச் சிறப்பிக்க வேண்டும்.

கந்தூரி மீலாது விழாக்களைச் சிறப்பாகச் செய்யுங்கள். நமது ஊரில் மீலாது கந்தூரி செய்வதால் நமக்கு மட்டுமல்ல. நம் எதிரிகளுக்கும் நன்மையுண்டு. பெண்களும் வீட்டில் மவ்லூது ஷரீப் ஓத வேண்டும்.

ஹஸன் - ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹுமா மவ்லூதையும் ஓதுங்கள். பத்ரு ஸஹாபாக்கள் மவ்லூதையும் ஓதுங்கள். இதனால் நன்மை பயக்குமேயன்றி கேடு விளைவதில்லை.

ரசூலுல்லாஹ்வைப் புகழக் கூடாது எனக் கூறிக் கொண்டு திரியும் வஹ்ஹாபிகள் நிறைந்த ஊர்களில் தான் கஷ்டம், நஷ்டம், துன்பம் ஏற்படுவதைக் காண முடிகிறது. வஹ்ஹாபிகள் பரவியதால் தான் அமைதியான சூழ்நிலை அழிந்தே போய்விட்டது. சிலோனில் கூட குழப்பங்களும் கஷ்டங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

வஹ்ஹாபியத் தலைவர்கள் இன்று பெரிய ஷைகுமார்களாக இமாம்களாக ஆக்கப்பட்டு இஸ்லாத்தில் குழப்பத்தை உண்டு பண்ணி வருகிறார்கள்.

ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை மனிதராகக் கருதுகிறார்கள். அவர்கள் ஒரு சாதாரண மனிதராகவிருந்தால், அவர்கள் செய்த எல்லாச் செயல்களில் ஒன்றையாவது இங்குள்ள ஒரு வஹ்ஹாபித் தலைவனுக்குச் செய்ய முடியுமா?

# அமுத மொழிகள்

எந்த தப்லீக் தலைவனுக்காவது செய்ய முடியுமா? இல்லை வேறொரு தலைவருக்காவது செய்ய முடியுமா?

இன்று பெரும் பெரும் விஞ்ஞானிகளெல்லாம் உள்ளார்களே அவர்களால் செய்ய முடியுமா?

ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் ஒரு வார்த்தைக்கு யாரும் நிகராக முடியுமா? இத்தனைக்கும் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் படிக்காதவர்கள்.

எம்,ஏ, படித்து எம்,பில் படித்த சில பெண் புரபஸர்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய வார்த்தைகள் இக்காலத்திற்குப் பொருந்தாது என்று மக்கள் மட்தியில் கூறியிருப்பதாய் அறிகின்றோம், மனதிற்குப் பெரிய வேதனை, நாயகம் படிக்காத கல்விக்கடல், சொல்பவரோ படித்து முடித்த மூடக்கடல், குப்ரு கலிமா கூறி நாயகம் அவர்களிடம் மன்னிப்பும் கேட்கவில்லையானால் இவ்வுகமும் அவ்வுகமும் அவர்களுக்கு நரகமாகிவிடும், இப்படிப் பட்டோரின் ஈமான் பறிபோய்விட்டது, இப்படியானவர்களிலிருந்து அல்லாஹ் நம் அனைவரையும் பாதுகாப்பானாக, ஆமீன், தஸ்லீமா நஸ்ரீன் என்பவளும் இவ்வாறான நிலையில் உள்ளவள்தான் என்பதை மறவாதிருக்கட்டும், (நஊதுபில்லாஹ்)

வாசிக்கவும் முடியாதவர்கள். அப்படியிருப்பினும் எந்தவொரு படிப்பாளியும் அறிவாளியும் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு நிகராக முடியுமா?

ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் வியர்வை கஸ்தூரி மணம் போன்றது என்பது உண்மை. ஆனால், வஹ்ஹாபிகள் இதனை ஏற்றுக் கொள்ளாமல், “எங்களுடையதுபோல் தான் இருக்கும்” என்கின்றனர்.

ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு கஸ்தூரி மணம் எப்படி வரும்? எனக் கேட்கின்றனர். அவர்களைக் கண்டவர்களா இவர்கள்? வஹ்ஹாபிகள் நாற்றமுடையோர், எனவே தங்களைப் போலவே ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களும் இருப்பார்கள் எனக் கூறுகின்றனர்.

# அமுத மொழிகள்

ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அனாதையான சிறுபிள்ளைகளின் தலைமீது அன்போடு கருணையோடு கைவைப்பார்களாம். அன்று முழுதும் அப்பிள்ளைகள்மீது மணம் வீசிக் கொண்டே இருக்குமாம்.

எனவே, ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் நம்மைப் போன்ற மனிதரல்லர். ஆனாலும் அவர்கள் மனிதர்தான் எனினும் அவர்கள் நம்மைப் போன்ற மனிதரல்லர்.

இரண்டு கை, இரண்டு கால், கண், மூக்கு, வாய் போன்ற உறுப்புகள் நமக்கிருப்பது போல் தான் அவர்களுக்குமிருந்தன. அதற்காக அவர்களை நம்மைப்போன்ற மனிதர் எனக் கூறவியலுமா? ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் தத்துவார்த்தம் என்ன என்பதனை அறிய வேண்டாமா?

எம்பாட்டனார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தார்கள்.

எனவே, இயற்கையே அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் வழங்கியது. ஆகாயம், காற்று, நீர் முதலியனவற்றை எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் நோக்குங்கால் அவையே அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் வழங்கலாயின.

மேலும், எம்பாட்டனார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் யாதொன்றைக் கொண்டும் “தேவையற்ற” (ஸமத்) நிலையிலிருந்தார்கள்.

ஒரு பொருளை உண்பதனாலோ அல்லது அருந்துவதனாலோ தாம் அவர்களுக்கு வயிறு நிரம்பும்; தாகம் தணியும் எனும் நிலைகளுக்கு அப்பாற்பட்டவர்களாகத் திகழ்ந்தார்கள்.

இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டே எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் “அய்யுகும் மிஸ்லீ” (உங்களிலே யார் எம்மைப் போன்றவர்?) என வினவினார்கள் என்பதும் சிந்திக்கத்தக்கதாகும்.

ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அன்பே வடிவானவர்கள். அவர்களின் ஆன்மீகம் நற்குண நடைமுறை வாழ்க்கை தான் மக்களை இஸ்லாத்தின் பால் தேடிவரச் செய்தது. அவர்கள்தாம் உலக மக்களுக்கு வாழ்க்கை முறையைக் கற்றுத் தந்தார்கள்.

# அமுத மொழிகள்

## அருமை மகவே! எமது பிரதிநிதியே!

1361-ம் வருடம், ஷஃபான் பிறை 13 ஆம் இரவிலே விழிப்பிற்கும் உறக்கத்திற்கு மிடையில் காண்கிறேன். எனது மிகப்பெரிய செல்வமும் எது நம்பிக்கைக்குரிய பிடியுமான முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது பரிசுத்த ரூஹளவில் எனது மிகப்பெரிய உகப்புக் கொண்டு அணுகினேன். நான் என்னையே மறந்து அந்தப் பரிசுத்த ரூஹில் தரிபடுகிற வரை எனது உள் நாக்கள் வெளி நாக்கள் அடங்கலும் கொண்டு அவர்களை அழைத்தேன். அங்கு ஹகீகத்துல் முஹம்மதிய்யா என்றறியப்பட்ட திருச்சோதியே யொழிய வேறில்லை.

நானடைந்த செல்வத்திற்கு, நானறிந்த இரகசியங்களுக்கு, நான் பெற்ற சந்தோஷத்திற்கு என்னதான் சொல்லுவேன். இந்த மூலாதாரமான பரிசுத்த ஒளியினால் வானங்கள், பூமிகள், அவற்றையுடையவர்கள் மீது நான் உதயமாகிற வரை, அவர்கள் மீதும், அவர்கள் கிளையார், சஹாபாக்கள் மீதும் அல்லாஹ் ஸலவாத்தும் ஸலாமும் கூறுவானாக.

எனது பாட்டனார் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை, பரிசுத்த சந்நிதானம் எனும் ஹலரத்துல் குத்ஸி-லே நான் கண்டவிதமல்லாத வேறு விதத்திலே கண்டேன். எனக்குச் சோபனம் கூறி அவர்களின் பரிவட்டத்தை அணிவித்து, மகனே! எனது கண் குளிர்ச்சியே! எனது அனந்தக்காரனே! என்றழைத்து, நீர் ஏவப்படுகிறதை நன்றாய்க் கூறும். எனது உதவி கொண்டு நிர்வாகம் புரியும் எனக்கூறி என் நேத்திரங்கள் மத்தியில் முத்தமிட்டார்கள். நான் பைத்துல் மஃமூர் அளவில் வந்தேன். அதன் மிஹ்ராபிலே என் பாட்டனார், மஹ்பூப் ஸுப்ஹானி அவர்களை ஸித்ரஹ்வில் நான் கண்ட விதமல்லாத விதத்தில் பார்த்தேன். எனக்குச் சோபனம் கூறி அவர்களின் "கில்ஆ" பரிவட்டத்தை அணிவித்தார்கள். "பைத்துல் மஃமூரிலே" அவர்கள் ஏவல் கொண்டு இரண்டு ரக்க அத்துக்கள் தொழுதேன். எனது நேத்திரங்களிடையே முத்தமிட்டு எனக்கு உபதேசித்துக் கூறினார்கள்:-

அருமை மகவே! எமது பிரதிநிதியே! எமது உதவி கொண்டு நிர்வாகம் புரியும் என்று. எனது குருமார்கள் அனைவரையும் அவர்கள் கரங்கள், பாதங்களைத் தொட்டு (முஸாபஹா) ஆலிங்கனம் செய்து கொண்டு சுவர்க்கத்தளவில் திரும்பினேன். அது எனக்கு சோபனம் கூறி கழுத்தைக் கட்டியது. எனது இந்தக் காட்சியிலிருந்து தெளிந்தேன். என்னிலிருந்து எனது பரிமளம் வீசியது. எனது ஸுப்ஹு தொழுகையைத் தொழுதேன். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்குரியன. எனவே என்னினின்றும் இந்த அடையாளம் வருமாறு கூறுகிறது.

***குத்புல் ஃபரீத் ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா (ரலி) அவர்கள். ( கலிமா விருட்சக் கனிந்த கனி. நூலிலிருந்து)***

# நபிகள் நாயகம்

# நற்குணத்தின் தாயகம்

♦ (நபிகள் நாயகம்) ஸல்லள்ளாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கடுமையான வெட்கமுடையவர்கள். இன்னும் அடக்கமுடையவர்கள்.

♦ அவர்களுடைய செருப்புக்கு அண்டை போட்டுக் கொள்வார்கள். (காலணியை செப்பனிட்டுக் கொள்வார்கள்)

♦ அவர்களுடைய உடைக்கு ஒட்டுப் போட்டுக் கொள்வார்கள்.

♦ அவர்களுடைய ஆட்டிலிருந்து பாற்கறப்பார்கள்.

♦ தயாளமான போக்கிலே அவர்களுடைய குடும்ப வேலையிலே ஈடுபடுவார்கள்.

♦ ஏழை எளியோரை உகப்பார்கள். அவர்களுடனே அமர்ந்திருப்பார்கள். அவர்களில் நோயாளிகளைச் சந்திக்கச் செல்வார்கள்.

♦ அவர்களில் இறந்தவர்களை (அடக்க எடுத்துச் செல்லும்போது) பின் தொடர்வார்கள்.

♦ ஏழ்மை ஒருவரைத் தாழ்மைப்படுத்தி அவரை மனமொடியச் செய்த அத்தகைய எளியவரை இழிவுபடுத்த மாட்டார்கள்.

♦ மன்னிப்பை ஒப்புக் கொள்வார்கள்.

♦ பொருத்தக்கேடான ஒருவனுடன் கருத்தொருமிக்க மாட்டார்கள். (நெருங்கிப் பழக மாட்டார்கள். ஒப்புக் கொள்ள மாட்டார்கள். நேர்முகப்பட மாட்டார்கள்.)

♦ அமங்கலிகளுடனும் அடிமைத்தனத்தையுடை யவர்களுடனும் நடந்து செல்வார்கள்.

♦ அரசர்களுக்கு அஞ்சமாட்டார்கள். (சங்கைசெய்ய மாட்டார்கள்)

♦ அள்ளாஹு தஆலாவுக்காகவே கோபிப்பார்கள். அவனுடைய பொருத்தத்தையே பொருந்திக் கொள்வார்கள்.

♦ ஆத்மீக வானவர்களுக்காக என் முதுகுப்புறத்தை (பின்புறத்தை) விட்டு விடுங்கள் எனக்கூறி அவர்களுடைய தோழர்களுக்குப் பின்னால் நடப்பார்கள். ♦ பெருமானார் அவர்களுக்கு அரசர்கள் சிலர் சன்மானமாகக் கொடுத்த குதிரை, ஒட்டகை, கோவேறு கழுதை, கழுதை முதலானவற்றில் வாகனிப்பார்கள்.

♦ நிச்சயமாகவே பூமியின் கருவூலங்களின் திறவுகோல்கள் (அனைத்தும்) பெருமானார் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தும் பசியினால் அவர்களின் வயிற்றின்மீது கல்லை வைத்துப் புடைவையினாற் கட்டிக் கொள்வார்கள்.

♦ பெருமானார் அவர்களுக்காக மலைகள் தங்கமாக அவர்களை நாடி வந்தன. ஆயினும் பெருமானார் அவர்களோ அவைகளை வேண்டாமென்று மறுத்தார்கள்.

♦ மேலும் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வீணான (காரியம் முதலானதில் ஈடுபடுவ)தைச் சுருக்கிக் கொள்வார்கள்.

♦ அவர்களைச் சந்தித்தவர்களை (முதலில்) ஸலாமைக் கொண்டே (எதையும்) ஆரம்பிப்பார்கள்.

♦ ஜும்ஆவின் குதுபாவை (பிரசங்கத்தைச்) சுருக்கிக்கொள்வார்கள்.

♦ சிறந்தவர்களுடன் நட்புக் கொள்வார்கள். கண்ணிய முடையவர்களுக்குச் சங்கை செய்வார்கள். அவர்களுடன் பரிகாசம் பண்ணுவார்கள்.

♦ அல்லாஹுவுக்குப் பொருத்தமான அவன் விரும்பிய உள்ளமையையேயன்றி அவர்கள் (எதையும்) சொல்லமாட்டார்கள்.

**மூல நூல்: பர்ஸன்ஜிய் மவ்லிது –**
**தமிழாக்கம்: குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் உஜூத், ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா**

---

## பூமான் நபியே போற்றி !

**நாயகம் போன்றவர் நானிலத்தில் வந்ததிலை**
**தூயநபி வந்திலரேல் தூவுலகும் - மாயமாம்**
**மற்றெலாந் தோன்ற வழியேது மில்லையிந்**
**நற்கூற்றே உண்மை நவில்.**

*- சங்கைமிகு ஷைகு நாயகம் அவர்கள் -*

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

14. அமைதியாக இருந்தவன் வெற்றி பெற்று விட்டான். *(நூல் : திர்மிதி)*

15. நீங்கள் மென்மையாக நடந்து கொள்ளுங்கள். சிரமங்களை உண்டாக்காதீர்கள். மேலும் சுபச்செய்திகளை கூறுங்கள் வெறுப்பை உண்டாக்காதீர்கள். *(நூல் : புகாரி)*

16. மோசடி செய்பவனும், கருமித்தனம் உடையவனும், செய்த உபகாரத்தை சொல்லி காட்டுபவனும், சுவர்க்கத்தில் நுழைய மாட்டார்கள். *(நூல் : திர்மிதி)*

17. கோள் மூட்டுபவன் சுவர்கத்தில் நுழைய மாட்டான். *(நூல் : புகாரி)*

18. ரஹ்மானை (அல்லாஹ்வை) வணங்குங்கள், உணவளியுங்கள், சலாத்தை பரப்புங்கள், சுவர்கத்தில் சாந்தியுடன் நுழைந்துவிடுவீர்கள். *(நூல் : திர்மிதி)*

19. இறந்தவர்களை திட்டாதீர்கள். இதனால் நீங்கள் உயிர் உள்ளவர்களுக்கு நோவினை கொடுப்பீர்கள். *(நூல் : திர்மிதி)*

20. முஃமினை திட்டுவது (பெரும்) பாவமாகும் மேலும் முஃமினை கொலை செய்வது குஃப்ரு (உடைய செயல்) ஆகும். (நூல் : புகாரி)

21. உறவை முறிப்பவன் சுவர்க்கத்தில் நுழையமாட்டான். *(நூல் : புகாரி)*

22. உங்களில் சிறந்தவர் உங்கள் குடும்பத்தார்களிடம் நல்லவராக இருப்பவரே. மேலும் நான் என் குடும்பத்தாரிகளிடம் உங்கள் அனைவரையும் விட சிறந்தவனாக இருக்கின்றேன். *(நூல் : இப்னு மாஜா)*

23. நானும் அனாதையைப் பராமரிப்பவனும் சுவர்க்கத்தில் இவ்வாறு இருப்போம் (என்று நபி (ஸல்) அவர்கள் தங்களுடைய கலிமா விரலையும், நடுவிலையும் இணைத்துக் காட்டினார்கள்.) *(நூல் : புகாரி)*

24. ஒருவரின் அண்டை வீட்டான் அவனுடைய தீங்கிலிருந்து நிம்மதியடையவில்லை என்றால் அவன் சுவர்க்கம் நுழையமாட்டான். *(நூல் : முஸ்லிம்)*

25. ஆலோசனை கேட்கப்படுபவர் நம்பிக்கைக்குரியவராக இருக்கின்றார் (எனவே நல்ல ஆலோசனை கூறவேண்டும்) *(நூல் : திர்மதி)*

26. உங்களில் உள்ள பெரியவர்களுடன் தான் பரகத் இருக்கின்றது. *(நூல் : ஹாகிம்)*

27. எவர் தன் சகோதரரின் தேவையை நிறைவேற்றுவதில் (ஈடுபட்டு) இருக்கின்றாரோ அல்லாஹ் அவருடைய தேவையை நிறைவேற்றுகின்றான்.

*(நூல் : அபூதாவூத்)*

28. ஒருவர் ஒரு முஸ்லிமின் (விற்ற அல்லது வாங்கிய பொருளை) திருப்பிக் கொடுப்பதை ஏற்றுக் கொண்டால் அல்லாஹுதஆலா அவருடைய தவறை திருப்பி விடுகின்றான். அதாவது மன்னித்து விடுகின்றான். *(நூல் : அபூதாவூத்)*

29.மென்மையான தன்மையை இழக்கப்பட்டவன் எல்லாவித நன்மைகளை விட்டும் இழக்கப்பட்டவனாவான். *(நூல் : முஸ்லிம்)*

30. எந்த நல்ல காரியத்தையும் இழிவாகக் கருதவேண்டாம். அது தன்னுடைய சகோதரரிடம் புன்முறுவலுடன் சந்திப்பதாக இருந்தாலும் சரியே!

*(நூல் : முஸ்லிம்)*

31. அமல் அனைத்தும் நிய்யத்தைக் கொண்டே சரியாகின்றன.

*(நூல் : புகாரி)*

32. அல்லாவிற்காக அன்பு கொள்வதும், அல்லாஹ்விற்காக விரோதம் கொள்வதும் அமல்களில் சிறந்தவையாகும். *(நூல் : அபூதாவூத்)*

33. தர்மம் கொடுப்பது அல்லாஹ்வின் கோபத்தை அணைத்து விடுகிறது. மேலும் தீய மரணத்தைவிட்டும் தடுக்கின்றது. *(நூல் : திர்மதி)*

34. நல்லதை சுட்டிக்காட்டுபவன் அதை தானே செய்தவனைப் போன்றாவான். *(நூல் : திர்மதி, அபூதாவூத்)*

35. உங்களிடம் (அல்லாஹ்வின் பாதையில்) புறப்படுங்கள் என்று கூறப்பட்டால் புறப்படுங்கள். *(நூல் : இப்னு மாஜா)*

36. என்னுடைய பேச்சுக்களில் ஒரு ஆயத்து அறிந்திருந்தாலும் (அதை) எத்தி வையுங்கள். *(நூல் : புகாரி)*

37. நல்ல விஷயத்திற்கு வழிகாட்டுபவருக்கு அந்த நல்ல செயலை செய்பவருக்கு கிடைக்கும் நன்மை போன்ற நன்மை கிடைக்கும்.

*(நூல் : அபூதாவூத்)*

38. ஒரு மனிதனின் இஸ்லாம் சிறப்பு பெறுவது அவன் தேவையற்ற விஷயங்களை விட்டு விடுவதாகும். *( நூல் ; திர்மிதி)*

39. சாப்பிடுபவனாக இருப்பது ஒரு முஃமினுக்கு நல்லதல்ல. (நூல் : திர்மதி)

40. நம்முடைய தீனில் இல்லாத புதிய விஷயத்தை கொண்டு வந்தால் அது ஏற்கப்படாது. *(நூல் : புகாரி, முஸ்லிம்)*

# கல்வத்து நாயகம் (ரலி)

*கலீபா. M. சிராஜுத்தீன் ஹக்கிய்யுல் காதிரி. திருச்சி.*

இறைநேசச் செல்வர்களை, அவர்கள் பேசும் பேச்சுக்களை மற்றொரு இறை நேசர்தான் அறிந்து கொள்ள முடியும். சாமான்ய மக்களால் அவர்களையும் அவர்கள் பேச்சுக்களையும் அறிந்து கொள்ளவே முடியாது.

ஒருசமயம் மாலிக் இப்னு தீனார் (ரலி) அவர்கள் வழியில் தோன்றிய நல்லார் ஒருவர் கல்வத்து நாயகம் அவர்களைப் பற்றி கேள்விப்பட்டு கீழக்கரைக்கு வந்து நாயகம் அவர்கள் முன் அமர்ந்து அவர்களின் பேச்சுக்களை மிகவும் ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார்.

ஒருநாள் கீழக்கரையைச் சேர்ந்த ஒரு ஆலிம் இந்த வெளியூர் நபரை அணுகி, ‘‘கல்வத்து நாயகம் பற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?’’ என்று கேட்டார். அதற்கு அவர், ‘‘நபிமார்களின் தகுதியைப் பற்றி நபிமார்களால்தான் விளங்கிக் கொள்ள முடியும். அதேபோன்று குதுபுமார்களின் தகுதியைக் ‘குதுபு’ மார்களேயன்றி வேறு எவராலும் அறிந்து கொள்ள முடியாது. இவர்களின் தகுதியை என்போன்ற சமானியரால் அறிய இயலாது’’ என்று அடக்கமாக பதில் கூறினார். இருந்தாலும் நான் இவர்களை சந்தித்த முதல் சந்திப்பிலேயே இவர்கள், ‘‘ஜுனைதுல் பகுதாதி (ரலி), அப்துல் கரீம் ஜீலி (ரலி), முஹ்யித்தீன் இப்னுல் அரபி (ரலி) போன்ற மெய்ஞ்ஞானிகளின் அணியைச் சேர்ந்தவர்கள் என்பதை விளங்கிக் கொண்டேன்’’ என்றும் கூறினர்.

கல்வத்து நாயகம் அவர்களைப் பல நாட்கள் சந்தித்து பழகியும் சிலருக்கு அவர்களின் மாண்பு தெரியாதே இருந்தது. இப்படிபட்ட நபர் ஒருவர் வேறு ஒரு ஷெய்கை அணுகி, நான் கல்வத்து நாயகம் அவர்களைப் பலமுறை சந்தித்திருக்கிறேன். அவர்கள் தம்மை ஒரு குதுபு என்று பகிரங்கமாக சொல்லவேயில்லை. எனக்கு அவர்கள் குதுபா இல்லையா என்று முடிவு எதுவும் எடுக்க முடியாமல் இருக்கிறது.

சாடை சைக்கினையாவே பேசுகிறார்கள். அறிவாளிகளுக்கு சைக்கினை போதும் என்றும் சொல்கிறார்கள். எனவே தாங்கள் தயவு கூர்ந்து குதுபுமார்களைப் பற்றி மார்க்க நூல்களில் எப்படி எழுதப்பட்டுள்ளது என்பதைச் சொன்னால் அதைக்

கொண்டு அவர்கள் தன்மையை கொஞ்சம் உரசிப் பார்த்துத் தெரிந்து கொள்ள முயற்சிக்கிறேன் என்று வேண்டினார். அந்த ஷெய்கும் அவருக்கு சில விஷயங்களைக் கூறி அனுப்பி வைத்தார்கள்.

இதன்பின் அந்த ஷெய்கு ஒருசமயம் கல்வத்து நாயகம் அவர்களைக் காணச் சென்றிருந்தார்கள். அப்போது கல்வத்து நாயகம் அவர்கள் தம் சீடர்கள் மத்தியில் பேசிக் கொண்டிருந்தார்கள். இந்த ஷெய்கும் அவர்களுடன் போய் அமர்ந்து கொண்டார். அப்போது திடீரென்று கல்வத்து நாயகம் அவர்கள், “அவருக்கெல்லாம் ஏன் விளக்கம் கூற வேண்டும்?” என்று பேச்சின் நடுவே கூறினார்கள். இந்த ஷெய்கு சற்று இடைவெளி கிடைத்தபோது, “தங்களை வழியில் சந்தித்து விளக்கம் கேட்டாரே ஜமால் முஹம்மது, அவருக்கெல்லாம் ஏன் விளக்கம் கூற வேண்டும்?” என்று கூறிக்காட்டியதும் ஷெய்குக்கு ஏற்பட்ட திடுக்கத்திற்கு அளவேயில்லை.

மற்றொரு தடவை கல்வத்து நாயகம் அவர்கள் தம் சீடர்களுடன் பேசிக் கொண்டிருந்த போது, “உலகில் ஒரு கௌது” இருக்கிறார் என்றால் அவர் உலகிலுள்ள அனைத்துப் பொருள்களின் அந்தரங்களையும் அறிந்திருப்பார். என்று கூறிவிட்டு சுலைமான் (அலை) அவர்களுடைய எறும்பின் பெயர் ‘கை ஜலூப்’ என்பதாகும். ஆனால் காமூஸில் கைனுக்குப் புள்ளி வைக்காது எழுதிவிட்டதன் காரணமாக அது ‘ஐ ஜலூப்’ என்று அழைக்கப்படுகிறது. என்று கூறிவிட்டு, “நான் ஃபிக்ஹுடைய உசூலையும் அதனுடைய அந்தரங்கத்தையும் அறிந்திருக்கிறேன்” என்று கூறித்தாம் ‘குத்பு’ என்பதை சாடையாகத் தெரிவித்தார்கள்.

மேலும் இமாம் அபுல் ஹஸன் ஷாதலி (ரலி) அவர்களும், அவர்களின் கலீபா அபுல் அப்பாஸ் முர்ஸீ (ரலி) அவர்களும் கூறியது போல கல்வத்து நாயகம் அவர்களும், “நான் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கண்டு கொண்டிருப்பதை விட்டும் ஓர் இமைப் பொழுதும் மறைக்கப்பட்டேனேயானால் நான் என்னை ஓர் இறை நம்பிக்கையாளன் (முஃமின்) என்று கருத மாட்டேன்” என்று கூறினார்கள்.

‘குத்பு’மார்கள் எச்செயலைச் செய்த போதிலும் அல்லாஹ்வுடைய உத்திரவன்றிச் செய்யமாட்டார்கள் என்று அப்துல் வஹ்ஹாப் ஷஃரானி (ரலி) அவர்கள் கூறியிருப்பது போல் கல்வத்து நாயகம் அவர்களும் ஒரு செயலைச் செய்யுமுன் அல்லாஹ்வின் உத்திரவை எதிர்பார்த்து இருப்பார்கள்.

அவர்களுக்கு இமாம் கஸ்ஸாலி (ரஹ்), இப்னுல் அரபி (ரலி), அப்துல் கரீம் ஜீலி (ரலி), குணங்குடி மஸ்தான் (ரலி) ஆகியோர் மீது அளவுகடந்த அன்பு இருந்தது

இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களின் உன்னதமான அறிவை அவர்கள் அடிக்கடி பாராட்டிப் பேசுவார்கள். ஒரு தடவை அவர்கள் தம் சொந்த சீடரிடம் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களின் மாண்பினைப் பற்றி எடுத்துரைத்துக் கொண்டிருந்தபோது, தாம் அவர்களைப் பற்றிக் கண்ட காட்சி ஒன்றை கூறினார்கள். அதாவது, விண்ணிலே ஒளிமயமான 'திரிகை' ஒன்று சுற்றிக் கொண்டிருக்கிறது, அதிலே மலை போன்ற வஸ்துக்கள் நுழைகின்றன. அடுத்தகணம் அவை தூள் தூள் ஆகிவிடுகின்றன. இதைக் கண்டு நான் பெரிதும் வியப்புற்று அந்த ஆற்றல் வாய்ந்த 'திரிகையை' பற்றி எண்ணிக் கொண்டிருக்கும்போது அது இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களின் பேரறிவு என்று என் உள்ளுணர்வு மூலம் அறிவிக்கப்பட்டது." என்று அவர்கள் கூறினார்கள்.

இப்னுல் அரபி (ரலி) அவர்கள் எழுதிய 'புத்தூஹாத்துல் மக்கிய்யா' ஃபுசூஸுல் ஹிகம் ஆகிய நூல்களை இவர்கள் மிகவும் விரும்பிப் படிப்பார்கள். ஃபுசூஸுல் ஹிக்கமுக்கு இமாம் அப்துல் ரஸ்ஸாக் காஷானி (ரஹ்) அவர்கள் எழுதிய விளக்கவுரை இவர்களின் அறிவை மேம்படச் செய்தது. "ஞான நூல்களுக்கு விரிவுரை எழுதப் பிறந்த மகன் இவர்" என்று அவரைப் புகழ்ந்து கூறுவார்கள்.

*(வரும்)*

---

**கற்றிலா நம்நபி கல்விக் கருவூலம்**
**பெற்றுடைத் தாய பெருநூலாம் – பொற்குர்ஆன்**
**உற்றுரைத்த வற்புதமே ஊழிவா ழுற்புதமாம்**
**கற்றறிக வென்பேன் கலை.**

**மனிதன் மனிதனாய் வாழவும் வைத்த**
**புனிதரே விண்ணிற் புவனந் – தனிலுமே**
**சூரிய சந்திரர் சூழ்ந்துள யாவுமே**
**நேரியர்க் கொப்பிலை நேர்.**

**பூமான் நபியே போற்றி !**

*- சங்கைமிகு ஷைகு நாயகம் அவர்கள் -*

# Goodbye Big Bang!

## *(Refutation of the Big Bang theory)*

S. Sarfudeen MBA

Scientists believe based on their cognitions on the cosmological theories, assumptions, and hypotheses that the universe has originated (came exist) from an “explosion”. They call it ‘Big Bang’.

The Big Bang theory, amongst the scientists, is a standard theory that suggests the observable universe grew (originated) from an infinitely dense point (smaller than a proton) or singularity. Scientists such as Stephen Hawking say that the universe was spontaneously created out of nothing.

Although the notion of Big Bang theory, originally first proposed by a Belgian priest and cosmologist Georges Lemaitre in 1930, is a prevailing hypothesis on origin of the universe, scientists have been trying to know that what would or might had been before the universe emerged to its existence (or manifested) from ***‘nothing’*** or ***‘singularity’***, as widely known in the cosmological term. Apparently it is the most interesting, astonishing and everlasting subject for many. The zest for trying to understand the origin of the universe is crucial.

Paradoxically, the views of theologians, philosophers and scientists on the origin of the universe obviously differ from each other. This is because the theoretical knowledge which scientists have need to rely on the physics whereas theologians have different cognitions that distinguish them from the scientists (astronomers,cosmologists, and theoretical physicists).

Scientists consider that the universe is a sepatate entity other than space. Besides, the proponents argue that the universe is being expanded into space.

So, did a Big Bang actually take place? And the universe emerged from it and is being expanded?

No!- how?

His Holiness JSKAAH Moulana asserts: 'Scientists propose a theory of 'big bang' that created the universe. They say a massive explosion (big bang) took place from the singularity causing creation of the universe. Scientists say, the universe emerged after the explosion (so called big bang). But we ask them where was the "subject matter" that exploded when the explosion was taking place? It would have been in the universe!'

If the universe is expanding, then what it is expanding into? There can't be any undisputed explanation that any scientist could provide on it.

The holy Quran (51:47) says: 'We have built the heaven with might, and We it is Who make the vast extent (thereof)'.

His Holiness JSKAAH Moulana explains that space is an integral part of the universe. The universe does not expand. Besides, we should not say that it is being expanded (it is not being expanded). It infinitely is as it is.

So, the space is already there infinitely. It may not be possible to be able to find the start and end of the universe.

Some cosmologists say that the universe has emerged from 'nothing'. They mean 'nothing' is absence of something. There is a differentiation in understanding the nature of the word 'nothing' between scientists and theologians.

According to the scientists 'nothing' is absence of something (singularity- the state before manifestation of the observable universe). But, according to the theologians nothing is being as if nonbeing (non-existence).இல்லையென்று இருந்தது. (In Tamil)

The basic and major misconception that was made by some of the prominent scientists is that the space and the universe are different. i.e.: universe expands in space.

His Holiness JSKAAH Moulana says: 'The universe is absolute. It is understood that one is manifested universe and the other one is substratum (underlying universe)'.

Scientists say that the universe is expanding. Galaxies are moving away from each other.

Not at all the universe is expanding, Galaxies are integral part of the universe. Even if they are moving away in space, it doesn't mean the space is expanding. the universe is infinite and consists of everything (matter,energy, and time).

Many scientists were unhappy with the universe having a beginning. They advanced theories in which the universe was expanding at the present time but did not have a beginning.

Stephen Hawking said, 'I believe that we should try to understand the beginning ot the universe on the basis of science. It may be a task beyond our powers, but atleast we should make the attempt'.

Scientists would never succeed and be successful to define (ascertain) the beginning of the universe. it is beyond the human comprehension. The state of latency- singularity- could be realized when one becomes so.

Although scientists concluded that the universe had a beginning, they are unable to provide an impeccable (flawless) picture on the origin of the universe. Hence, many theories- hypotheses have emerged supporting their decisions or to support the grey area of their ambiguities and there is a limitation on human comprehension to understand the beginning of the universe and the 'state' before manifestation of the same.

Yet, some philosophers such as Aristotle advocated that the universe did not have a beginning. he believed that the universe had existed forever.!

Imagine that the universe doesn't exist at all, and you don't exist either. How could you feel about non existence of the universe including you? *Being as if nothing exists:* this is the status that we cannot articulate by words. It's beyond the human comprehension. This is the state of being nonexistent before the universe is manifested.

A great Persian Sufi poet compares the universe to a manuscript. As the manuscript has become old, the first chapter, and the last chapter have been lost. By this, the great poet metaphorically states that it is beyond the human comprehension to ascertain the beginning and end ot the universe.

Simply, we will not be able to ascertain the beginning and end ot the universe as we weren’t present before the universe sprang from the singularity, a widely used word in the scientists terms for being the state of nothing. (Latent - *Being as if nonbeing*) இல்லையென்று இருந்தது. (In Tamil)

The word **singularity** can be translated into Arabic as

لاتعيّن – كنز المخفى – عمَا

AMAA, kansul mahbi, laatha ayyun

References:


Thuhfathul mursala (Tamil) - by HH JSKAAH Moulana

Haqayikussafa (Tamil) - by HH JSKAAH Moulana

Water booth for the thirsty - by HH JSKAAH Moulana

A universe from nothing - by Lawrence M Krauss

Brief answers to the big questions - by Stephen Hawking

Endless universe - beyond the big bang - by Paul J

The big picture - by Sean Carroll


---

கோடிக் கலைஞர்கள் கூடித் திருநபிக்கு
ஈடு கொடுப்பினு மீடாகா – ரேடு
படியா நபியவர்க்கு பாரினி லொப்பில்
படித்தவர் யாரும் பகர்.

*- சங்கைமிகு ஷைகு நாயகம் அவர்கள் -*

**பூமான் நபியே போற்றி !**

நபி (ஸல்) அவர்களின்

# புனித பாரம்பரியம்

**தந்தையின் வம்சா வழி:-**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முபாரக்கான பெயர் முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) ஆகும். தந்தையின் பெயர் அப்துல்லாஹ், பாட்டனார் பெயர் அப்துல் முத்தலிபாகும். சொந்த (தாதி) தந்தைவழி பாட்டியின் பெயர் பாத்திமா பின் து அம்ருபின் ஆயுத் ஆகும். பாத்திமா பின்து ஆயிதின் தாயார் பெயர் ஸக்ராபின்து அப்துபின் இம்ரான் ஆகும். ஸக்ரா பின்து அப்து பின் இம்ரான் அவர்களின் தாயார் பெயர் துக்மர் பின்து அப்து பின் குஸிய் ஆகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முப்பாட்டனாரின் பெயர் ஹாஷிம் ஆகும். முப்பாட்டி (அதாவது அப்துல் முத்தலிபின் தாயார்) பெயர் ஸல்மாபின் து அம்ருபின்து ஜைத் ஆகும் ஸல்மா பின்து அம்ரு பின் ஜைத் அவர்களின் தாயார் பெயர் உமைரா பின்து ஸக்ரு ஆகும். உமைரா பின்து ஸக்ருடைய தாயார் பெயர் ஸல்மா பின்து அப்துல் அஷ்ஹல் நஜாரியா ஆகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முப்பாட்டனாரின் தந்தை பெயர் அப்து முனாஃப் ஆகும். முப்பாட்டனாரின் தாயார் பெயர் ஆதிகா பின்து முர்ரா ஆகும். ஆதிகா பின்து முர்ராவின் தாயார் பெயர் ஸஃபிய்யா பின்து ஹவ்ஜா ஆகும்.

**தாயின் வம்சா வழி :-** நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தாயார் பெயர் ஆமினா பின்து வஹப் ஆகும் (நன்னா) தாயாரின் தந்தையின் பெயர் வஹப்பின் அப்து முனாஃப்பின் ஜுஹ்ராபின் கிலாப்பின் முர்ராபின் கஅப்பின் லுயி ஆகும். நன்னிமாவின் பெயர் பர்ரா பின்து அப்துல் உஜ்ஜா ஆகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தாய்வழி முப்பாட்டனார் (அதாவது பர்ரா அவர்களின் தந்தை) பெயர் அப்துல் உஜ்ஜா பின் உஸ்மான் பின் அப்துத்தார் பின் குஸி பின் கிலாப் ஆகும். முப்பாட்டி (அதாவது பர்ரா அவர்களின் தாயார்) பெயர் உம்மு ஹபீப் பின்து அஸத் பின் அப்துல் உஜ்ஜா பின் குஸி பின் கிலாப் ஆகும். உம்மு ஹபீப் அவர்களின் தாயார் பெயர் பர்ரா பின் து அவ்ஃப்பின் உபைத் பின் உவைஜ் பின் அதீபின் கஅப்பின் லுயி ஆகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வம்சம் மிக பரிசுத்தமானதாகவும் உயர்ந்ததாகவும் இருக்கின்றது.

ஒரு ஹதீஸில் நான் உங்கள் அனைவரையும் விட குலம் கோத்திரம் மற்றும் சம்பந்த உறவில் மிகப் பரிசுத்தமானவனாகவும் உயர்ந்தவனாகவும் இருக்கின்றேன். என்னுடைய மூதாதையர்களில் ஹஜ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முதல் இன்றுவரை யாரும் விபச்சாரம் செய்ததில்லை எல்லோரும் நிக்காஹ்வின் மூலமாகத் தான் பிறந்தார்கள் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

(நூல் இப்னு மர்துவியா)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு பரிசுத்த மனைவிமார்களும் பத்தினித்தனம் உள்ளவர்களாக வழங்கப்பட்டு இருந்தார்கள் எல்லோரும் மிகவும் பத்தினித்தன்மை உள்ளவர்களாகவும் தமது கற்பைப் பாதுகாக்கக்கூடியவர்களாகவும் இருந்தார்கள். எந்த மனைவியும் தன்மீது பலி சுமத்தும் விதத்தில் ஆக்கி கொள்ளவில்லை. மாறாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். எந்த நபியின் எந்த மனைவியும் தனது கற்பை குறையுள்ளதாக ஆக்கவில்லை. ஆகையால் தான் ஹஜ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் பரிசுத்தத் தன்மையைப் பற்றி குர்ஆனில் இறங்கியது இதன் மூலம் தெரிகின்றது நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தாயும் தந்தையும் மிகவும் பரிசுத்தமானவர்களாக இருப்பார்கள்.

### குடும்ப வாழ்க்கை

ஹள்ரத் அலி (ரலி) மற்றும் ஹள்ரத் முஆத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். பெண்களின் கூட்டத்தினர்களே! நீங்கள் அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள். மேலும் உங்களுடைய கணவர்களின் பொருத்தத்தை தேடுங்கள். ஏனெனில் ஒரு பெண் (தன் மீது) தனது கணவரின் கடமை என்ன? என்பதை அறிந்துவிட்டால் அவனுக்கு முன்னால் நின்று கொண்டே இருப்பாள். உட்கார மாட்டாள். எதுவரை அவனுக்கு முன்னால் மதிய உணவு மேலும் மாலை உணவு கொண்டு வரப்பட்டு (அவன் அதை) சாப்பிட்டுக் கொண்டு இருக்கின்றான்) அதை சாப்பிட்டு முடிக்கும் வரை. (நூல்கள்: பஜ்ஜார், தப்ரானி, மஜ்மஉஜ்ஜவாயித்)

### நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குழந்தைகள்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குழந்தைகள் சம்பந்தமாக பல கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. ஆதாரப்பூர்வமான சொல்லின்படி மூன்று மகன்களும் நான்கு மகள்களும் இருந்தார்கள். 1. ஹள்ரத் காஸிம் (ரலி) 2. அப்துல்லாஹ் (ரலி) இவர்களுக்கு தய்யிப், தாஹிர் என்றும் கூறப்படுகின்றது

3. ஹள்ரத் இப்ராஹீம் (ரலி) 1. ஹள்ரத் ஜைனப் (ரலி) 2. ஹள்ரத் ருகையா (ரலி) 3. ஹள்ரத் உம்மு குல்சூம் (ரலி) 4. ஹள்ரத் பாத்திமா ஜுஹ்ரா (ரலி) நான்கு மகள்களும் அல்ஹம்துலில்லாஹ் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். மதீனாவிற்கு ஹிஜ்ரத்தும் செய்தார்கள். நிக்காஹ்வும் செய்து கொண்டார்கள். ஹள்ரத் இப்ராஹீம் (ரலி) அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அடிமைப்பெண் மாரியா கிப்திய்யா (ரலி) அவர்கள் மூலம் பிறந்தார்கள். ஆனால் சிறு வயதிலேயே இறந்துவிட்டார்கள். ஹள்ரத் இப்ராஹீம் (ரலி) அவர்களைத் தவிர மற்ற எல்லா குழந்தைகளும் ஹள்ரத் கதீஜா ரலி அவர்கள் மூலம் பிறந்தார்கள் மற்ற மனைவிமார்களின் மூலமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு எந்தக் குழந்தையும் பிறக்கவில்லை. ஹள்ரத் இப்ராஹீம் (ரலி) அவர்களைத் தவிர மற்ற மகன்களைப் பற்றி கருத்து வேற்றுமை உள்ளது. சிலர் ஹள்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்களின் பெயர்தான் தய்யிப், தாஹிர் ஆகும் என்றும் மற்றும் சிலர் இவர்கள் இருவர் அப்துல்லாஹ் (ரலி) அல்லாத மற்றவர்கள் ஆவார்கள் என்றும் மற்றும் சிலர் இன்னும் இருமகன்கள் இருந்தார்கள். அவர்களின் பெயர் முதய்யிப், முதஹ்ஹிர் என்பதாகும் என்று கூறியுள்ளார்கள்.வல்லாஹு அஃலமுபிஸ்ஸவாப்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பேரர்கள் மற்றும் பேத்திகள் மொத்தம் எட்டாகும் 1. அலி (ரலி) அல்லது அப்துல்லாஹ் (ரலி) 2. ஹள்ரத் உமாமா (ரலி) 3. ஹள்ரத் யஹ்யா (ரலி) 4. அப்துல்லாஹ் (ரலி) 5. ஹள்ரத் ஹஸன் (ரலி) 6. ஹள்ரத் ஹுஸைன் (ரலி) 7. உம்மு குல்சூம் (ரலி) 8. ஜைனப் (ரலி) இதன் விவரம் வருமாறு.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குழந்தைகளில் மூத்தவர்கள் ஹள்ரத் காஸிம் (ரலி) அவர்களாவார்கள். ஆனால் அவர்கள் இரண்டு ஆண்டுகள் வரை வாழ்ந்தார்கள். இவர்களின் பக்கம் இணைத்து தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் புனைப்பெயர் அபுல்காஸிம் என்று கூறப்படுகின்றது. எல்லோரைவிட சிறியவர்கள் இப்ராஹீம் (ரலி) அவர்களாவார்கள் மகள்களில் மூத்தவர்கள் ஹள்ரத் ஜைனப் (ரலி) அவர்களாவார்கள் எல்லோரையும் விட சிறிய மகள் ஹள்ரத் பாத்திமா (ரலி) அவர்கள் ஆவார்கள். ஹள்ரத் ஜைனப் (ரலி) அவர்களின் நிக்காஹ் ஹள்ரத் கதிஜா (ரலி) அவர்களின் சகோதரி மகன் அபுல்ஆஸ்பின் ரபீஃ அவர்களுடன் நடந்தது. (இவர்கள் ஹிஜ்ரத்திற்குப் பின் இஸ்லாத்தை ஏற்றார்கள்) இவர்களின் மூலம் ஒரு ஆண்குழந்தை பிறந்தது அவருடைய பெயர் அலீ (ரலி) அல்லது அப்துல்லாஹ் (ரலி) ஆகும். இவர்கள் சிறு வயதிலேயே

காலமாகி விட்டார்கள். ஒரு பெண்குழந்தை பிறந்தது, அவர்களின் பெயர் உமாமா (ரலி) ஆகும். ஹள்ரத் அலி (ரலி) அவர்கள் ஹள்ரத் பாத்திமா (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பின் இவர்களை நிக்காஹ் செய்து கொண்டார்கள் . ஹள்ரத் அலீ (ரலி) அவர்கள் ஷஹீதானபின் முகைரான் நவ்ஃபல்பின் ஹாரிஸ் ஹாஷிமி (ரலி) அவர்களுடன் நிக்காஹ் நடந்தது அவர்கள் மூலம் யஹ்யா (ரஹ்) என்ற ஒரு மகன் பிறந்தான். ஆனால் ஹள்ரத் ஜுபைர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். ஹள்ரத் ஜைனப் (ரலி) அவர்களின் இரண்டு குழந்தைகளின் மூலமாக சந்ததிகள் தொடரவில்லை. ஹள்ரத் உம்மு குல்சூம் (ரலி) மற்றும் ஹள்ரத் ருகையா (ரலி) இருவரும் ஆரம்பித்தில் அபூலஹப் உடைய இரண்டு மகன்களின் நிக்காஹ்வில் இருந்தார்கள். ஆனால் அவர்களின் மூலம் எந்தக் குழந்தையும் பிறக்கவில்லை. அதன்பின் இருவரும் ஒன்றன் பின் ஒன்றாக ஹள்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் நிக்காஹ் செய்து கொண்டார்கள். ஹள்ரத் ருகையா (ரலி) அவர்களுக்கு மட்டும் அப்துல்லாஹ் என்ற ஒரு ஆண்குழந்தை பிறந்தது. சிறு வயதிலேயே காலமாகி விட்டார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குழந்தைகளில் ஹள்ரத் பாத்திமா (ரலி) அவர்களைத் தவிர மற்ற எந்த குழந்தைகள் மூலமும் சந்ததிகள் நீடிக்கவில்லை. ஹள்ரத் பாத்திமா (ரலி) அவர்களின் மூலம் தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சந்ததியனர்கள் நீடித்தார்கள் இன்ஷா அல்லாஹ் கியாமத் வரை நீடித்து இருக்கும்.

சையித் வம்சத்தினர்கள் அனைவரும் இவர்களின் சந்ததியினர்கள் தான் ஹள்ரத் பாத்திமா (ரலி) அவர்களுக்கு மொத்தம் ஐந்து குழந்தைகள் 1. ஹசன் (ரலி) 2.ஹுசைன் (ரலி) 3. முஹ்ஸின் (ரலி) 4. உம்மு குல்சூம் (ரலி) 5. ஜைனஸ் (ரலி) இதில் முஹ்ஸின் (ரலி) அவர்கள் சிறுவயதில் காலமாகி விட்டார்கள். உம்மு குல்சூம் (ரலி) அவர்களை ஹள்ரத் உமர் (ரலி) அவர்கள் நிக்காஹ் செய்து கொண்டார்கள். ஆனால் குழந்தை பிறக்கவில்லை. ஜைனப் (ரலி) அவர்களை ஹள்ரத் அப்துல்லாஹ் பின் ஜஃபர் (ரலி) அவர்கள் நிக்காஹ் செய்து கொண்டார்கள். அவர்கள் மூலமும் குழந்தை பிறக்கவில்லை. ஹஜ்ரத் ஹசன் (ரலி) மற்றும் ஹஜ்ரத் ஹுசைன் (ரலி) அவர்களின் மூலம் தான் குழந்தைகள் பிறந்தன.

ஹள்ரத் அலி (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களின் நேரத்தை மூன்று பகுதியாகப் பிரித்து வைத்திருந்தார்கள். ஒரு பகுதியில் அல்லாஹ்வை வணங்குவதற்கும் மற்றொரு பகுதியில் தன் வீட்டினர்களின் குடும்ப வாழ்க்கை சம்பந்தமான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் மூன்றாவது பகுதியை தன்னுடைய உடல் ஓய்விற்காகவும் வைத்திருந்தார்கள். தனக்காக ஒதுக்கப்பட்ட பகுதியையும் மக்களுக்கு மத்தியில் பிரித்து வைத்திருந்தார்கள். அதாவது அதில் அதிகமான நேரத்தை உம்மத்துடைய வேலைகளுக்காக கொடுத்து விடுவார்கள். (நூல் : உஸ்வயே ரசூலே அக்ரம்)

# தஃப்ஸீர் ரூஹுல் பயான்

**அலிஃப், லாம், மீம் என்ற குர்ஆன் என்பதே அந்த வாக்குறுதி அளிக்கப்பட்டவேதமாகும். அதில் சந்தேகமில்லை. அது இறை பக்தியாளர்களுக்கே வழி காட்டக் கூடியதாகும்.**

**அத்தியாயம் 2, வசனம் 2**

### திருக்குர்ஆனின் தனிச் சிறப்பு

நபி மூஸா (அலை) அவர்களுக்கு தவ்ராத் வேதம் அருளப்பட்டபோது அதில்– "ஆயிரம் இறைவசனங்கள் பூர்த்தி செய்யப்பட்ட ஒரு அத்தியாயம்" என்ற அமைப்பில் ஆயிரம் அத்தியாயங்கள் இருப்பதைக் கவனித்த– நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைவா ! இவ்வளவு பெரிய இந்த வேதத்தை ஓதுவதும் மனனம் செய்வதும் முடியாத காரியமாயிற்றே? எப்படி ஆயிரம் வசனங்கள் கொண்ட ஆயிரம் அத்தியாயங்களை ஓதுவது? மனனம் செய்வது என்று கேட்டபோது இறைவன் கூறினான். நபியே மூஸா இதை விட மிகப் பெரும் வேதத்தை நான் இறக்கி வைக்க உள்ளேன் என்றான் இறைவன். இறைவா ! யார் மீது? நபியே இறைத் தூதர்களில் நிறைவுத் தூதருக்கு. இறைவா ! எனது உம்மத்தார்களவிட வாழ்நாள் குறைக்கப்பட்ட– ஆயுள் குறைவாக வாழக்கூடிய உம்மத்தே முஹம்மதிய்யாவினர் எப்படி தவ்ராத் வேதத்தை விட பெரிய வேதத்தை ஓத முடியும்? நபியே ! இறையாகிய நான் அந்த உம்மத்தினருக்கு இலகுவாக்குவேன். அவர்களில் சிறுவர்கள் கூட அதை ஓதுவர் என்றான் இறைவன்.

இறைவா அந்த வேதம் எப்படி அமைந்திருக்கும்? நபியே ! இறையாகிய நான் மொத்தம் "நூற்றிமூன்று" வேதங்களை இறக்கியுள்ளேன். அவற்றில் நபி ஷீது அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு ஐம்பது, நபி இத்ரீஸ் (அலை) அவர்களுக்கு முப்பது, நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இருபது சிறிய வேதங்களும் உங்களுக்கு தவ்ராத் வேதமும் நபி தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு ஜபூர் வேதமும், நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இன்ஜீல் வேதமும் ஆக மொத்தம் நூற்றி மூன்று வேதங்களிலும் கூறப்பட்டுள்ள அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கி திருக்குர்ஆனைத் தருவேன் அதில் நூற்றுப் பதினான்கு அத்தியாயங்களும் முப்பது ஜுஸ்வுகளும் ஏழு எல்லைகள் கொண்டதாக அனைத்து ஜுஸ்வுக்குகளும் அமைந்திருக்கும்.

அந்த ஏழு எல்லைகள் கொண்ட முழுக்குர்ஆனின் கருத்துக்களும் ஃபாத்திஹா சூராவில் உள்ள ஏழு வசனங்களில் உள்ளது. ஃபாத்திஹா சூராவில் உள்ள ஏழு வசனங்களின் மொத்தக் கருத்துக்களும் பிஸ்மில்லா என்ற ஏழு எழுத்துக்களில் உள்ளது. அந்த ஏழு எழுத்துக்களின் மொத்தக் கருத்துக்களும் அலிப் லாம் மீம் என்பதில் உள்ள அலிஃபில் அமைந்துள்ளது. அதாவது பகரா சூராவின் முதல் எழுத்தான அலிஃபில் முழுகுர்ஆனின் கருத்துக்கள் மறைந்துள்ளது. முழுக் குர்ஆனில் அனைத்து வேதங்கள்- ஸுஹுபுகளின் மொத்தமும் உள்ளடங்கியுள்ளது. இதுதான் அலிஃப் என்ற ஒரு எழுத்தின் தனிப்பெரும் சிறப்பாகும் என்று இறைவன் நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு விளக்கினான்.

எனவே அலிஃப் லாம் மீம் என்பது அதுதான் வேதம், யூதர்களே எதை நான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இறக்க வில்லை- இறக்கித் தரவில்லை என்று மறுக்கிறீர்களோ எல்லா வேதங்களும் எந்த ஒரு எழுத்தில் மறைந்துள்ளதோ அந்த அலிஃப் லாம் மீம் என்பது வேதமாகும். அதில் சந்தேகமில்லை.

**சந்தேகம்**

“ரய்ப்” என்பதற்கு கூறப்படும் அர்த்தங்களும்- விளக்கங்களும் 1. கலக்கம் 2. தடுமாற்றம் 3. சந்தேகம்

4. தடுமாற்றம் தரும் விஷயங்களிலிருந்து விலகி தடுமாற்றம் இல்லாத விஷயங்களின் பக்கம் விரைந்திடுங்கள் என்பது நபிமொழி. அதாவது இரண்டில் எது தெளிவாக உள்ளதோ அதை தேர்ந்தெடுத்து மற்றதை விட்டு விடுங்கள்.

5. “ஷக்கு” என்றால் சந்தேகம் என்று பொருள். “ரய்ப்” என்பதற்கும் சந்தேகம் என்று பொருள். ஆனால் “ரய்ப்” என்பதற்கு பயம் கலந்த சந்தேகம் என்று பொருள் வருவதால் (இரண்டு முரண்பட்ட விஷயங்களில் எது சரியானது என்று “முடிவு” எடுப்பதில் பயம் வருகின்ற அளவு சந்தேகம் வருவதால்) ரய்புன் என்ற வார்த்தை தேர்வு செய்யப்பட்டுள்ளது. – ஆதாரம் தப்ஸீர் தயஸ்ஸுர்.

**கேள்வி**

6. திருக்குர்ஆன் விஷயத்தில் சந்தேகம் இருந்ததால் தான் காபிர்கள் வேதம் என்று ஏற்றுக் கொள்ளவில்லை. இஸ்லாத்தில் இருந்து கொண்டு அதற்கு- திருக்குர்ஆன் வசனங்களுக்கு வெளிப்படையான பொருள்களை மட்டும் ஏற்றுக்கொண்டு உட்பொருள்களை மறுக்கும் இஸ்லாத்தின் “பித்அத்” காரர்கள். திருக்குர்ஆன் வசனங்களில் உட்பொருளில் “சந்தேகப்பட்டதால் தான்”

பித்அத் காரர்களாகிப் போனார்கள். உலமாக்கள்– முபஸ்ஸிரீன்கள்– திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் திருக்குர்ஆன் வசனங்களை இரண்டாகப் பிரித்து ஒன்று தெளிவான அர்த்தமுள்ளது. மற்றொன்று குழப்பமான அர்த்தமுள்ளது, தெளிவான அர்த்தமுள்ள வசனங்களைப் பின்பற்ற வேண்டும் ஆனால் குழப்பமான அர்த்தமுள்ள வசனங்களைப் பின்பற்றக் கூடாது என்று கூறும் சில விரிவுரையாளர்கள் குறிப்பிட்ட சில வசனங்களின் பொருளில் சந்தேகப்படுவதால்தான் அவைகளைப் பின்பற்றக்கூடாது எனக்கூறுகிறார்கள். படிப்பறிவில்லாதவர்கள் கூட சந்தேகப்படுவதால் தான் அதன் பொருளை விளங்க மறுக்கிறார்கள். சுருங்க கூறின் 1. காபிர்கள் 2. பித்அத் வாதிகள் 3. சில திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் 4. பொது மக்கள் ஆக அனைவருக்கும் ‘‘சந்தேகம்’’ இருக்க அல்லாஹ் யாருக்கு சந்தேகமில்லை எனக் கூறுகிறான்?

**பதில்–** சந்தேகப் படுபவர்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ‘‘திருக்குர்ஆன் சந்தேகமற்றது’’.

7. ‘‘லா ரய்ப’’ என்பதற்கு நீங்கள் சந்தேகப்பட வேண்டாம் என்றும் பொருள் கூறப்படுகிறது.

**இந்த வசனங்களுக்கு கூறப்படும் பொருள்கள்**

1. வழிகெட்டு இறைபக்தி வேண்டும் என்று கடும் முயற்சியுடையோருக்கு இந்த திருக்குர்ஆன் நேர்வழி காட்டக் கூடியது.

2. இர்ஷாத் எனும் தஃப்ஸீரில் கூறப்படுகிறது. சென்ற காலத்திலிருந்து மீண்டு தற்போது இறையச்சம் வேண்டும் என்றும் மாறிக் கொண்டிருப்பவர்களுக்கு இந்த மறை நேர்வழி காட்டும் என்று பொருள். ஏனெனில் இந்த திருமறையை ஓதுபவர்கள்– சிந்திப்பவர்கள் முஃமினாக– காபிராக யாராக இருந்தாலும் இத்திருக்குர்ஆனைக் கொண்டு படிப்பினை பெறுபவர்கள் முஃமின்களில் இறையச்சம் உடையவர்கள் மட்டுமே. திருக்குர்ஆனில் இன்னொரு இடத்தில் என்று வருகிறது. அதாவது அனைத்து மனிதர்களுக்கும் இத்திருமறை ‘‘விளக்கம்’’ தந்தாலும் நேர்வழி என்பது இறையச்சம் உள்ளவர்களுக்கே உரித்தானது– நூல் இர்ஷாத்.

3. சூரியன் கண்நோய் உள்ளவர்களுக்கு–பார்வையற்றவர்களுக்கு தெரிவதில்லை. சுவை அறியாதவனுக்கு தேன் சுவை தெரிவதில்லை, நுகரும் சக்தி இழந்தவனுக்கு கஸ்தூரி வாசம் தெரிவதில்லை. எனவே இத்திருமறை கொண்டு எல்லோரும் பயன்பெற முடியாது. கடல் அலை அலையாய் உயரம் வந்துபோனாலும் தாகித்தவன் அதை அறியாவிட்டால் மிகப்பெரும் நஷ்டம்

அவனுக்குத்தான். முழுச் சந்திரன் பூமியில் உலாவந்தாலும் இருட்டில் இருப்பவனுக்கு நஷ்டம் தான். நறுமணம் அருகே இருந்தாலும் அதை அறியா மனிதனுக்குப் பெரும் நாற்றம் தான். பூஞ்சோலையை பார்த்துக் கொண்டே காய்ந்து போன மரம் நஷ்டத்திற்குரியது தான். இவற்றைப் போல் திருக்குர்ஆனில் அனைத்தும் இருந்தும் அதை அறியா மனிதர்களுக்கு பெரும் நஷ்டம்தான். எக் காரணம்கொண்டும் திருக்குர்ஆன் நேர்வழி காட்டக்கூடியதே.

***(என். ஸயீது முஹம்மது ஆலிம் மிஸ்பாஹி ஹக்கிய்யுல் காதிரிய்– நாஜிர், மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரி – திருச்சி. )***

## திருச்சி மதுரஸாவில் முப்பெரும் விழா

உலகளாவிய ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை சார்பில், மீலாதுன் நபி விழா– ஹள்ரத் முஹிய்யுத்தீன் அப்துல் காதிர் ஜீலானீ (ரலி) அவர்கள் நினைவு தின விழா– உலகளாவிய மீலாதுன் நபி இணையவழி கேள்வி பதில் பரிசளிப்பு விழா ஆகிய முப்பெரும் விழாக்கள் இன்ஷா அல்லாஹ் வரும் அக்டோபர் 30.10.22 காலை 9 மணி முதல் மதியம் 2 மணிவரை திருச்சி மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரி வளாகத்தில் மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் தமிழகத்தின் மிகப்பெரும் உலமா சொற்பொழிவாளர்கள், அரசியல் தலைவர்கள், சமுதாயப் பிரமுகர்கள், மதுரஸா வளர்ச்சியில் பங்கேற்ற புரவலர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இணையவழி கேள்வி பதில் போட்டியில் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது இயற்றிய அற்புத அகில நாதர் நூலிலிருந்து 21 கேள்விகளும், பாத்திமா நாயகியார் மாலை நூலிலிருந்து 21 கேள்விகளும் மற்றும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்வியல் பற்றி பொதுவான 21, ஆக 63 கேள்விகள் கேட்கப்பட்டு அதற்கு சரியாக விடையளித்தவர்களுக்கு பிரமாண்டமான பரிசுத் தொகைகள் வழங்கப்பட உள்ளன.

**முரீதுகளுக்கென தனியான போட்டியும் பரிசும் உள்ளன.**

இந்தப் போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு இவ்விழாவில் பரிசுகள் வழங்கப்படும். பெருமானாரைப் போற்றும் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் சிறப்பான நூற்களையும், நமது மதுரஸாவையும் மக்கள் அறிந்து கொள்ளும் பெருநோக்கில் இவ்விழா நடைபெறவுள்ளது.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

# நிக்காஹ் (எ) திருமண நன்றி அறிவிப்பு

அன்புடையீர்! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பேரருளாலும், நபிகள் நாயகம் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களது துஆ பரக்கத்தாலும், அன்னவர்களின் திருப்பேரர் குத்புஸ்ஸமான், ஷம்ஷுல் வுஜுது, **ஜமாலிய்யா அஸ்ஸய்யித் கலீல் அவ்ன் மௌலானா** அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்களின் நல்லாசியாலும், நிகழும் ஹிஜ்ரி 1444 ஆம் ஆண்டு ஸபர் பிறை 11 ஆம் நாள் (ஆவணி மாதம் 23 ம் நாள்)

**08.09.2022 வியாழக்கிழமை காலை 10.45 மணிக்குமேல் 11.45 மணிக்குள் முபாரக்கான வேளையில்**

---

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம் புதுவயல், மர்ஹூம் **A.** முஹம்மது முஸ்தபா– மர்ஹூமா **M.** ஆயிஷா மரியம் இவர்களின் மகன்வழிப் பேரனும், இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், எமனேஸ்வரம் மர்ஹூம். **K.S.A.** ஷேக் முகம்மது அம்பலம்– ஜனாபா. **K.S.** மஹ்மூதாபீவி இவர்களின் மகள்வழிப் பேரனும், எங்கள் செல்வப் புதல்வனுமாகிய தீன்குலச் செல்வன்

## J. முஹம்மது நாஜிஹ் B.E.,

**Procurement Engineer, Economic Group Holdings-Dubai U.A.E மணமகனுக்கும்**

தேனி மாவட்டம், போடி நாயக்கனூர், மேலத்தெரு, மர்ஹூம் **A.** அப்துல்காதர்– ஜனாபா. **A.** சாலிஹா பீவி அவர்களின் மகன் வழிப் பேத்தியும், தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம் கெங்குவார்பட்டி மர்ஹூம். **P.** சௌகத் அலி – ஜனாபா. **S.** ரஹ்மத் பேகம் அவர்களின் மகள்வழிப் பேத்தியும் சென்னை, ஜனாப் **A.** ராஜா மைதீன்– ஜனாபா. **R.**சுல்தானா ரஸியாபேகம் அவர்களின் செல்வப் புதல்வியுமாகிய தீன்குலச்செல்வி

## R. பாஹிமா பர்வீன் B.Com., மணமகளுக்கும்

---

நிக்காஹ் (திருமணம்) பெரியோர்களால் நிச்சயித்தவண்ணம் **வத்தலக்குண்டு, பச்சைபட்டி ரோடு, ஸ்டேட் பேங்க் காலனி எதிரில் K.S.M.M. மெமோரியல் ஹாலில்** நடைபெற்ற திருமணத்தில் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்கள் ஹக்கில் துஆச் செய்ததுடன் அதன்பின் நடைபெறும் விருந்திலும் கலந்துகொண்டு சிறப்பித்தமைக்கு நன்றிகளை சமர்ப்பிக்கின்றோம்.

அவ்வண்ணமே அழைத்த,
ஜனாப். **A. ராஜா மைதீன் B.Sc.,B.Ed.,**
ஜனாபா. **A. சுல்தானா ரஸியாபேகம்**
ஹோட்டல் தாஜ்மஹால், ஜார்ஜ் டவுன்,
சென்னை– 01. **Mobile : 94443 38803**

**தங்களன்புள்ள,**
**A.M. ஜெயினுலாபுதீன் B.Com., Ex. Accountant Manager Cars Dubai.**
**S. மஹ்சூமாபேகம் M.A.,B.Ed.,**
17, லூர்து நகர், மெடிக்கல் காலேஜ் ரோடு, ஒடுக்கம், திண்டுக்கல்– 3.
**Mobile : 86108 28377, 97876 66635**

## திருச்சி நகரில்

# கர்பலா விழா

ஹள்ரத் தப்லே ஆலம் பாதுஷா நத்ஹர் வலி (ரலி) தர்ஹா நிர்வாகம், யாஸீனிய் மௌலவிகள் பேரவை மற்றும் மெய்ஞ்ஞான இளைஞரணி இணைந்து, சென்ற **18.08.2022** வியாழக்கிழமை மாலை அஸர் முதல் இஷா வரை, திருச்சி தப்லே ஆலம் பாதுஷா நத்ஹர் வலி (ரலி) தர்ஹா வளாகத்தில், சங்கைக்குரிய ஸய்யிதுஷ் ஷுஹதா இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் தியாக வரலாற்றை நினைவுகூரும் வண்ணம் **புனித கர்பலா சிறப்பு பயான் நிகழ்ச்சி** நடைபெற்றது.

நிகழ்ச்சியின் தொடக்கமாக, **புனித ஹுஸைன் மவ்லிது** மஜ்லிஸ் நடைபெற்றது. பின்னர், ஹள்ரத் தப்லே ஆலம் பாதுஷா நத்ஹர் வலி (ரலி) அவர்களின் ரவ்ளா ஷரீஃபில் மலர்ப்போர்வை போர்த்தி ஜியாரத் செய்யப்பட்டது.

மஃரிபுத் தொழுகைக்குப் பிறகு நடைபெற்ற சிறப்பு பயான் நிகழ்ச்சிக்கு, ஹள்ரத் தப்லே ஆலம் பாதுஷா நத்ஹர் வலி (ரலி) தர்ஹா தலைமை அறங்காவலர் அல்ஹாஃபிழ். **A.அல்லா பக்ஷ் (எ) முகமது கௌஸ்** அவர்கள் தலைமை தாங்கினார். ஹள்ரத் தப்லே ஆலம் பாதுஷா நத்ஹர் வலி (ரலி) தர்ஹா பொது அறங்காவலர்கள் ஹாஜி.**M.சையது ஸலாவுதீன்** அவர்கள், ஜனாப். **N.A. நூர்தீன்** அவர்கள், திருச்சி நத்ஹரியா மஹல்லா ஸுன்னத் வல் ஜமாஅத் தலைவர் ஜனாப்.**N.சையது ஜாகிர்** அவர்கள், தர்ஹா மீலாது கமிட்டி செயலாளர் ஜனாப்.**J.S.M.ஜமால்** அவர்கள், இந்திய ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை பொதுச் செயலாளர் ஜனாப்.**S.யாஸீன்** ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள், பஸ்மே ரப்பானி திருச்சி மாவட்டத் தலைவர் அல்ஹாஜ்.**S.சையது அமீர்ஜான்** காதிரிய் ரப்பானி அவர்கள், இந்திய யூனியன் லீக் திருச்சி மாவட்டச் செயலாளர் அல்ஹாஜ்.**G.H. முஹம்மது ஹக்கீம்** அவர்கள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கடலூர் மாவட்டம் கீழக்கல்பூண்டி ஜாமிஆ மஸ்ஜித் பேஷ் இமாம் மௌலவி. **M. முஹம்மது ஆஷித்** ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய் கிராஅத் ஓத, யாஸீனிய் மௌலவிமார்கள் வஹ்ததுல் வுஜூது இசைக்க, இராமநாதபுரம் ஈஸா பள்ளிவாசல் துணை இமாம் அல்ஹாஃபிழ். மௌலவி. **V.M. முஹம்மது ஸகரிய்யா** ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய் நபிப்புகழ்ப்பா பாடினார்.

யாஸீனிய் மௌலவிகள் பேரவை துணைத் தலைவர் மௌலவி. **A.கலீலுர் ரஹ்மான்** ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய் வரவேற்புரையாற்றினார்.

திருமுல்லைவாசல் சங்கைமிகு. செய்யிது.**M.யாஸீன் மௌலானா ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்களின் வாழ்த்துரையைத் தொடர்ந்து, இந்திய ஏகத்துவ மெய்ஞ்ஞான சபையின் தலைவர் கலீபா. ஆலிம் புலவர்.**S.ஹுஸைன் முஹம்மது** ஹக்கிய்யுல் காதிரிய்யுல் மன்பஈ அவர்கள், திருச்சி மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரி பேராசிரியர் மௌலவி. **J.S.முஹம்மது தாஹிர்** மஹ்ழரீ ஷாஹ் ஜமாலி கலீமி அவர்கள், மெய்ஞ்ஞான இளைஞரணி செயலாளர் மௌலவி.**S.பீர் முஹம்மது** ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

நிகழ்ச்சியின் முத்தாய்ப்பாக, அல் அஸ்ரார் மாத இதழ் ஆசிரியர் அல்ஹாஜ். அல்ஹாஃபிழ். மௌலவி. **T.S.A.அபூதாஹிர்** மஹ்ழரி ஃபாஜில் ஜமாலி ஹள்ரத் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

ஜம்இய்யத்துல் உலமா சபை பொருளாளர் மௌலவி.**G.ஷர்புத்தீன்** ஆலிம் யாஸீனிய் அவர்கள் நன்றியுரையாற்றினார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்களுக்கு, சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் நூல்களும் வழங்கி, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.

நிறைவாக, திருச்சி மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரி நாஜிர் ஹள்ரத் மௌலவி. N. ஸயீது முஹம்மது ஆலிம் மிஸ்பாஹி ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் துஆ ஓத ஸலவாத்துடன் நிறைவு பெற்றது. நிகழ்ச்சியை யாஸீனிய் மௌலவிகள் பேரவை தலைவர் அல்ஹாஃபிழ். மௌலவி. **V.M.முஹம்மது ஹஸன் ஆலிம் யாஸீனிய்** ஹக்கிய்யுல் காதிரிய் தொகுத்து வழங்கினார்.

நிகழ்ச்சியில், முரீதுகள், அஹ்பாபுகள், மதுரஸா பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் உள்பட திரளானோர் கலந்து கொண்டனர். பெண்களுக்குத் தனி இடவசதி செய்யப்பட்டு, இணைய வழி மூலம் நிகழ்ச்சி நேரலையாக ஒளிபரப்பட்டது. அனைவருக்கும் சிறப்பான கந்தூரி உணவு பகிரப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை யாஸீனிய் மௌலவிகள் பேரவை ஆலிம்கள் சிறப்பாகச் செய்திருந்தனர்.

தகவல் : இப்னுஸ்ஸலாம் M.A., திருச்சி.

# மெய்யொளி வீசிய போது....

1. ஒவ்வோர் ஆத்மாவும் மௌத்தை (இறப்பை) சந்தித்தே தீரும்.

மேற்கண்ட குர்ஆன் வசனத்திற்கு கலீபா அட்வகேட் லியாக்கத்அலி அவர்கள் கீழ்கண்டவாறு விளக்கம் அளித்தனர்.

ஒரு புத்த துறவியிடத்தில் ஒரு கேள்வி கேட்கப்பட்டதாம் அதாவது... எப்பொழுது உலகம் அழியும் என்று?

அதற்கு அவர்கள் என்று 'When you get enlightenment' கூறினார்களாம். ஆம் . மோட்சம் அடைந்தபிறகு உலகம் என்பது இல்லாமற் போகும் என்ற கருத்தை கூறிவிட்டு...

ஒவ்வொரு ஆத்மாவும் இந்த மௌத் (இறப்பு நிலை... அதாவது enlightenment) என்பதை அனுபவிக்கும் என்று கூறினார்கள்.

இதற்குத்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இறப்புக்கு முன் இறந்து விடுங்கள் என்று கூறியிருப்பதையும் நினைவு கூறினார்கள்.

2. விதியை மதியால் வெல்ல முடியுமா என்று கேட்டார்கள்.....

திரும்ப அவர்களே இந்த வேள்வியைக் கேட்டுவிட்டு முடியாது என்றார்கள்.

ஏனென்றால் விதி என்பதே நடந்து முடிந்தவற்றை குறிப்பதுதான். அதனால் முடியாது என்றார்கள்.

3. ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மறைவான ஞானம் உண்டா என்று கேட்டார்கள்?

மறைவான ஞானம் இல்லை என்று பதில் கூறினார்கள். ஏனென்றால் அவர்களுக்கு மறைவானது என்பது ஒன்றில்லை (எல்லாமே அறிந்தவர்கள்) ஆகவே அவர்களுக்கு மறைவான ஞானம் என்பது தேவையில்லை என்று கூறி முடித்தார்கள்.

4. 'ஹுவல் ஆன கமா கான' அவன் முன்பிருந்தது போலவே இப்பொழுதும், என்கிற விடயத்திற்கு விளக்கம் அளிக்கும் முகமாக கீழ் கண்ட கவிதையைக் கூறினார்கள்.

இல்லாதிருந்த சூனியம் – இல்லாதிருக்கும் சின்மயம்

அதாவது... சூனியமான இல்லாத நிலையில் இருந்தது... அதுவே (வெளியான போதும் மறையக்கூடிய) நிலையில் இருக்கின்றது.

இல்லை ஆனால் இருந்தது.. இருக்கிறது ஆனால் இல்லை.

மொத்தத்தில் அமாவான நிலை எப்பொழுதும் ஒன்றுதான்.

**பொதுநலம் என்பது...**

நான் இரண்டு நாட்கள் விடுப்பு எடுத்து எனது குடும்பத்தை இந்தியாவிலிருந்து அழைத்து வர ஊர் சென்றிருந்தேன். 19 ஆகஸ்ட் 2022 அன்று நான் கலீபா வக்கீல் மாமாவை சந்தித்தேன். என்னிடம் போனில் பேச வேண்டுமென அவர்கள் சொல்லிவிட்டதற்கிணங்க, நான் சந்தோஷமடைந்து அவர்களை நேரிலே சந்திக்க சென்றிருந்தேன். அதிராம்பட்டிணம் அப்துர்ரஹ்மான் அண்ணனும் கூட இருந்தார்கள். அண்ணனும் கூட இருந்தார்கள். வழக்கம்போலவே ஞானச் செறிவுடைய கருத்துக்களை பரிமாறினார்கள்.

நமது மதுக்கூர் சபையின் செயல்பாடுகளைப் பற்றி செய்திகள் பேசிக்கொண்டிருந்த பொழுது அவர்கள், சுதந்திர தின விழாக் கொண்டாட்டம் நமது மதுக்கூர் ஏகத்துவ மெய்ஞ்ஞான சபையின் சார்பில் மதுக்கூர் பேருந்து நிலையத்தில் கொடியேற்றி அண்மையில் கொண்டாடியதைப் பற்றிக் கூறினார்கள். மதுக்கூர் சபை செயல்பாடுகளில் போற்றத்தக்கதாக இந்நிகழ்ச்சி அமைந்திருந்தது. இதுபோலுள்ள நிகழ்வுகளைத்தான் அவர்கள் விரும்புவதாகக் கூறினார்கள். அதாவது, குறைவான செலவு மற்றும் செயல்பாடுகளில் நிறைந்த பலன்களைப் பெறுவது.

இக்கொடியேற்ற நிகழ்வு என்பது மிகச்சிறியது ஆனால், அது பொதுமக்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்துள்ளது. நாம் அதிகம் செலவு செய்து சோறு ஆக்கி பகிர்வதைவிட இது மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளதைப் பற்றி விளக்கினார்கள். இக்கொடியேற்ற நிகழ்வினில் மதுக்கூர் துணைக் காவலர் கொடியேற்றி, 75 தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டது. அப்போது அந்தக் கன்றுகளை நமது சபையைச் சார்ந்தவர்களும் பெற்றுச் சென்றனர் என்ற கருத்து எதிர்மறையாக பேசப்பட்டது. அப்போது வக்கில் மாமா அவர்கள் **நமது பிள்ளைகளுக்கு இல்லாமல் என்ன பொதுநலம்? என்று கேட்டுவிட்டு, பொதுநலம் என்பது கர்ப்பவதி உணவு உண்பது போல** எனக்கூறினார்கள அதாவது, ஒரு பெண் கருவுற்றிருக்கும் பொழுது, அவள் வழக்கத்திற்கு மாறாக நிறைய உண்ண வேண்டும். அது பார்ப்பதற்கு சுயநலமாகத் தோன்றும் (இவள் சுயநலமாக அதிகமாக உண்கிறாளே என) ஆனால் உண்மையில் அவள் தனக்காக மட்டும் நிறைய உணவை உண்ணவில்லை, தன் வயிற்றில் வளரும் சிசுக்காகவுந்தான். ஆக, **பொதுநலம் என்பதே தன்னையும் சேர்த்ததுதான்** என்றனர்.

மேலுமவர்கள், ஒரு வரலாற்று நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டினார்கள். ஆழியூரில் புதிய பள்ளிவாசல் திறக்கப்பட்டபொழுது தமிழ்நாடு முஸ்லிம் லீக்கிலிருந்து

சொற்பொழிவாற்ற வந்த ஒருவர், தான் பள்ளிவாசல் திறக்கப்படும் ஊர்களில் தான் கூறப்போகும் ஒரு வரலாற்று நிகழ்வை கூறும்படி பணிக்கப்பட்டிருப்பதாகக் கூறிவிட்டு ஒரு நிகழ்ச்சியைக் கூறினாராம். அதாவது, வள்ளல் சீதக்காதி (ரஹ்) அவர்கள் காலத்தில், சில நபர்கள் தங்கள் ஊரில் பள்ளிவாசல் கட்டவேண்டும் என்பதற்காக அக்காலத்தில் ஊரெல்லாம் வள்ளல் என்று பேசப்படும் சீதக்காதி (ரஹ்) அவர்களைச் சந்தித்து நிதி பெற்று வரலாம் என்று சென்றார்களாம்.

அப்போது வள்ளலவர்கள் தங்களின் பணியாளர் ஒருவரிடத்தில் (குற்களைக்கொண்டு விளக்கேற்றும் அந்த காலத்தில், தன் பணியாளர், ஒரு கல்லை உரசி ஒரு விளக்கிற்கு ஒளியேற்றிவிட்டு அந்த தீபத்தைக் கொண்டு மறு விளக்கையேற்றாமல் மறுபடியும் அக்கல்லை உரசி விளக்கேற்றியதற்காக, அதாவது– அவர் சிக்கனமாக இல்லாமல் இருந்ததற்காக) பெரிதும் கடிந்து கொண்டார்களாம். இதைக்கண்ட பள்ளிவாசலுக்கு நிதி வாங்க வந்த அவர்களுக்கு சந்தேகம் வந்துவிட்டது. ஊரெல்லாம் வள்ளல் எனப் போற்றப்படக்கூடியவர் இச்சிறு நிகழ்விற்கு இவ்வாறு கடிந்து கொள்கிறாரே, இவரா நமது பள்ளிவாசலுக்கு நிதியளிக்கப் போகிறார்? என்று நினைத்துக் கொண்டிருக்கையில், வள்ளலவர்கள் வெளியே வந்து, வாருங்கள் என்றழைத்து அவர்கள் வந்த நோக்கத்தை அறிந்து பின்பு அந்த பள்ளிவாசலுக்காக ரூ. 1000 (இன்றைய மதிப்பு ஒரு கோடியாகும்) என்று எழுதி கொடுத்தார்களாம். வந்தவர்கள் அதிர்ச்சியுற்றதை கவனித்த அவர்கள் "ஏன் போதவில்லையா? இன்னும் வேண்டுமா?" என்று கேட்டார்களாம்.

வந்தவர்களோ தான் கண்ட காட்சியையும் அதனால் தங்களுக்கு ஏற்பட்ட தவறான நினைப்பையும் அவர்களிடம் கூறிய பின்பு, வள்ளலவர்கள், **இப்படியெல்லாம் சேர்த்தால்தான் இவ்வாறு உங்களுக்கெல்லாம் உதவ முடியும் என்றார்களாம்.**

இந்நிகழ்ச்சியைக் கூறிவிட்டு வக்கில் மாமா அவர்கள், பொதுநலத்தோடு வாழக்கூடியவர்களின் தோற்றம் இவ்வாறு தானிருக்கும் எனக்கூறினார்கள். **பொதுநலமென்பது, அதைச் செயல் படுத்துபவரின் நலத்தையும் உள்ளடக்கியதுதான்.** தன்னைவிடுத்து எந்தப் பொதுநலனும் இல்லை என்ற கருத்து விளங்கியது.

இந்தமுறையும் கலீபா அவர்களினால் வழங்கப்பட்ட தேனீரின் சூடு உரைத்தது.

*தகவல் – நன்றியுடன். அ. முகமது சாதிக். மதுக்கூர்.*

*தொடர் ( 41)*

# இனிக்கும் இறைமொழி

இறையருட் கவிமணி கா. அப்துல் கஃபூர் எம்.ஏ.

## வாழ்க வணிகம் ! வீழ்க கலப்படம்!

“விசுவாசிகளே உங்களில் ஒருவருக்கொருவர் பொருந்திக் கொள்ளும் முறையில் ஏற்படும் வாணிபம் மூலமாக வன்றி ஒருவருக்கொருவர் பொருள்களைத் தவறான முறையில் விழுங்கி விட வேண்டாம்”. (4-29).

அப்துல்லாஹ்விடமிருந்து அப்துர்ரஹ்மான் ஒரு நிலத்தை விலைக்கு வாங்கினார். வாங்கிய நிலத்தில் வீடு கட்டுவதற்காக அஸ்திவாரம் தோண்டுகின்றார், ஒரு புதையல் வெளிப்படுகின்றது, உடனே அப்புதையலை எடுத்துச் சென்று அப்துல்லாஹ்விடம் கொடுத்து தாம் விலை கொடுத்து வாங்குவதற்கு முன்னரே அப்புதையல் நிலத்திலிருந்ததால், அப்புதையலுக்குரியவர் அப்துல்லாஹ்வே யெனக் கூறினார். அப்துல்லாஹ்வோ தாம் அந்நிலத்தை மண்ணடங்க மரமடங்க விற்று விட்டதன் காரணமாக அதிலுள்ள எப்பொருளுக்கும் தாம் உரியவரல்ல எனக் கூறிப் புதையலைப் பெற்றுக் கொள்ள மறுக்கிறார். ஆகவே இதற்குரிய தீர்ப்பை வழங்குவதற்கு காஜியார் வேண்டிக்கொள்ளப் படுகின்றார். இருவருமே புதையலை ஏற்றுக் கொள்வதற்கு மறுப்பதைக் கண்ட காஜியார், அவர்களின் வாரிசுகளைப் பற்றிய விவரம் அறிய விரும்பினார். அப்துல்லாஹ்வுக்கு 20 வயதிற்கு மேலான ஒரு புதல்வரும், அப்துர்ரஹ்மானுக்கு 16 வயது நிரம்பிய ஒரு புதல்வியும் இருப்பதை அறிந்த காஜியார், அவ்விருவருக்கும் திருமணம் முடிவித்துப் புதையலை புதுமண மக்களுக்குத் திருமணப் பரிசாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்கின்றார்.

பக்தாதைத் தலைநகராகக் கொண்ட இராக் நாடு, பழம் புகழ் வாய்ந்தது. அங்கு ஒரு சிற்றூரில் வாழ்ந்த கோதுமை வணிகர் கௌது முகம்மது, பக்கத்திலிருந்த பஸ்ரா நகருக்குத் தம் முகவர் ஒருவரைக் கோதுமை மூட்டைகளுடன் அனுப்புகின்றார். பஸ்ராவுக்குச் சென்றவுடனேயே அங்கு அப்போதிருக்கும் நிலவரத்திற்கொப்பக் கோதுமையை விற்பனை செய்யுமாறு பணித்திருந்தார். ஆனால் முகவரோ அங்குச் சென்றவுடனேயே கோதுமையை விற்றுவிடாமல், தம் நண்பர்களின் ஆலோசனைப்படி, அதிக இலாபம் கிடைக்குமெனக் கருதிப் பத்து

நாட்கள் பொறுத்திருந்து பன்மடங்கு இலாபத்திற்குக் கோதுமையை விற்கின்றார். மகிழ்ச்சியுடன் முதலாளிக்கு விவரத்தைத் தெரிவித்துக் கடிதம் அனுப்புகின்றார். கடிதத்தைப் பெற்ற முதலாளி மகிழ்ச்சி கொள்வதற்கு மாறாக சீற்றமடைகின்றார். கடிதத்திற்கு பதில் வரைகின்றார்– "இறைநெறிக்கு மாறாக வணிகம் செய்தல் கூடாதென்னும் என் கருத்தைப் புரிந்து கொள்ளாமல், அதிக லாபம் ஈட்டியுள்ளதாக நீர் குறிப்பிட்டிருப்பது என் நெஞ்சத்தில் ஈட்டியைப் பாய்ச்சுகின்றது. நீர் கோதுமையை மட்டுமல்ல, நன்னெறியையும் விற்று விட்டு என்னைக் குற்றவாளியாக்கி விட்டீர். இக்கடிதம் கண்டவுடன் இலாபத்தொகை முழுவதையும் அங்குள்ள ஏழைகளுக்குத் தானமாக வழங்கி, உணவுப் பொருளைப் பதுக்கி வைத்த குற்றத்திலிருந்து நான் விடுதலை பெறுவதற்குத் துணை செய்வீராக. இது என் கட்டளை."

இவை போன்ற முன்னாள் நிகழ்ச்சிகள் பல, இஸ்லாமிய வரலாற்றில் இடம் பெற்றுப் பொன்னே போல் பொலிவுற்றுக் கொண்டிருக்கின்றன. உலகில் பிறந்த அனைவருக்கும், உண்டியும் உடையும் உறையுளும் பிறவும் இன்றியமையாத் தேவைகளாகும். அத்தேவைகளை அடைய வணிகத்தின் வழியாகவோ, பிற தொழில்கள் புரிந்தோ உழைத்துப் பொருளீட்ட வேண்டும் ஆதி நபி ஆதம் (அலை) முதலாக, சோதி நபி நாயகம் (ஸல்) ஈறாக, வையகத்துள் வாழ்ந்துள்ள இறை தூதர்களெல்லாம் உழைத்துண்பதையே உயர்வாகக் கருதி வந்துள்ளனர். நபி ஆதம் (அலை) அவர்கள் ஏர் பிடித்து உழுதுள்ளார்கள். நபி தாவூத் (அலை) அவர்கள் உருக்குச் சட்டை செய்பவர்களாக இருந்தார்கள். நபி நூஹ் (அலை) அவர்கள் ஆடையும் தச்சுத் தொழிலில் ஈடுபட்டிருந்தார்கள். நபி இத்ரீஸ் (அலை) அவர்கள் ஆடைகள் தைத்தார்கள் நபி மூஸா (அலை) அவர்கள் ஆடு மேய்த்தார்கள்.

அண்ணல் பெருமானார் (ஸல்) அவர்கள், சின்னஞ்சிறு பருவத்திலேயே பெரிய தந்தை அபூதாலிப் அவர்களுடன் வணிகக் குழுக்களுடன் இணைந்து வெளிநாடு சென்று வந்தார்கள், வணிகத்தில் அவர்கள் காட்டிய நேர்மையின் காரணமாக, கதீஜா பிராட்டியார் அவர்களின் முகவராகப் பொறுப்பேற்று, வணிகர்களுக்கும் முன் மாதிரியாகத் திகழ்ந்தார்கள். நாயகத் தோழர்களான ஹள்ரத் அபூபக்கர், ஹள்ரத் உதுமான், ஹள்ரத் தல்ஹா, அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ப் போன்றோர் பெரும் வணிகர்களாகவும் திகழ்ந்தார்கள், வணிகத்தில் திரட்டிய செல்வத்தை அறப்பணிகளுக்காக வாரி வழங்கினர். ஒருபோது ஹள்ரத் அப்துர் ரஹ்மானிப்னு அவ்ப் அவர்கள் வெளிநாடு சென்றபோது, தங்கள் வணிகத்தை ஹள்ரத் ஸஅத் அவர்களிடம் ஒப்படைத்துச் சென்றார்கள். அவர்கள் திரும்பி வந்தபோது, அவர்கள் ஒப்படைத்த வணிகத்திலிருந்து ஈட்டிய இலாபத்தில் நேர்பாதி அவர்களிடம்

ஒப்படைக்கப்பட்டபோது,“ உழைத்தவருக்கே ஊதியம் அதில் எனக்கு உரிமையில்லை” யெனக் கூறித் தனியாகவே ஒரு வணிகத்தைத் தொடங்கி அதில் பெரும்பொருளை ஊதியமாக அடைந்தார்கள். அண்ணல் பெருமானார் அவர்கள் போதித்த அறநெறிகளை வாழ்க்கையில் அப்படியே கடைப்பிடித்து, பாருலகின் பல பகுதிகளுக்கும் சென்ற அறபியர்களின் நேர்மையான வணிகத்தையும் உயர்ந்த நடைமுறைகளையும் நேரிற் கண்ட மக்கள் கூட்டங் கூட்டமாக இஸ்லாம் நெறியைத் தழுவினர்.

இம்மையிலும் மறுமையிலும் செம்மையாக வாழ்வதற்குரிய வழியைக் காட்டுவதே இஸ்லாம். “ஓட்டையும் பொன்னையும் ஒக்கவே நோக்கும்” துறவறத்திற்கு இஸ்லாத்தில் இடமில்லை. வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகைக்குரிய அழைப்பினைச் செவிமடுத்தால் முஸ்லிம்கள் வணிகத்தை விட்டு, இறைவனை வணங்குவதற்காகப் பள்ளிவாயிலுக்கு விரைந்து செல்லவேண்டுமென்றும், தொழுகை முடிந்தவுடன், பள்ளிவாயிலிருந்து வெளிப்பட்டு, பூமியில் பரவிச் சென்று, அல்லாஹ்வின் அருளைத் தேடிக்கொள்ள வேண்டுமென்றும் அருள்மறை இயம்புகின்றது. செல்வத்திற்கு “அல்லாஹ்வின் அருள்” என்னும் சிறப்பைக் கொடுத்ததோடு அமையாமல், அதைத் தேடிக்கொள்வதற்கும் ஊக்கமளிக்கின்றது “செய்க பொருளை” என்று மட்டும் கூறாமல், எவ்வாறு பொருள் திரட்ட வேண்டுமென்றும் விளக்கிக் காட்டுகிறது. அவ்விளக்கங்களில் ஒன்றே தலைப்பில் இடம் பெற்றுள்ள இறைவசனமாகும்.

“விசுவாசிகளே! உங்களில் ஒருவருக்கொருவர் பொருந்திக் கொள்ளும் முறையில் ஏற்படும் வாணிபம் மூலமாகவன்றி ஒருவருக்கொருவர் பொருள்களைத் தவறான முறையில் விழுங்கி விட வேண்டாம். அன்றி (இதற்காக உங்களில் ஒருவருக்கொருவர் சச்சரவிட்டு) வெட்டிக்கொள்ளவும் வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது அன்புடையோனாக இருக்கிறான். (4-29)

இறைமறையின் நான்காவது அத்தியாயமாக, அமைந்துள்ள “பெண்கள்” எனப் பொருள்தரும் சூறா “நிஸா”வில் அனாதைகள், பெண்கள், வாரிசுரிமை, திருமணம் போன்ற பல பொருள்களைப் பற்றி விளக்கிய பின்னர், பொருளீட்டுவது தொடர்பாக மனிதன் மேற்கொள்ள வேண்டிய நடைமுறை இவ்வசனத்துள் கூறப்பட்டுள்ளது. பொய், புரட்டு, மோசடி, சூதாட்டம், பந்தயம், கலப்படம், வட்டி போன்ற தவறான வழிகளில் பிறரின் பொருளைக் கவர்ந்து விழுங்குதல் கூடாதென இங்கு எச்சரிக்கப்பட்டுள்ளது. சட்டத்திற்கு மாற்றமின்றி ஒருவருக்கொருவர் ஒப்புதலுடன் செய்யும் வணிகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. கொடுப்பதும் குறைபடாது, கொள்வதும்

மிகைபடாது, கொடுக்கல் வாங்கலில் இரு சாராரும் மனநிறைவு பெறுதல் வேண்டும். அன்பொடு வாராத பொருளாக்கத்தைத் தீதெனக் கருதி ஒதுக்கித்தள்ள வேண்டும்.

வணிகத்தில் தூய்மையும் வாய்மையும் பாதுகாப்பது மிகக் கடிதாகும். ஆகவேதான், உண்மையான– நம்பிக்கையான– வணிகர், நபிமார்கள் சித்திகீன்கள் சுஹதாக்கள் சாலிஹீன்கள் ஆகியோருடன் ஒருங்கு வைத்து எண்ணப்படுவரென நபிமொழி யொன்று நவில்கின்றது. "சத்தியம் செய்வதால் பொருட்கள் விலை போகுமெனினும் அதிலுள்ள பரக்கத் அகன்று விடுகிறது" என்பது நாயக நன்மொழியாகும். ஏனெனில் சத்தியம் செய்யும் பழக்கம் ஏற்பட்டுவிட்டால், போகப்போகப் பொய்ச் சத்தியமும் நுழைந்து விடுகிறது. அவ்வாறே பரக்கத் அகன்று விடுகிறது. பரக்கத் அகன்றுவிடும் என்பதற்குப் பொருள், அவ்வழியாக வரும் வருவாய், திருடர்களால் திருடப்பட்டோ, வழக்குகள் நோய்கள் வழியாகவோ, வேறு வீண் செலவுகள் வழியாகவோ அழிந்துவிடுமென்பதாகும்.

ஒருவரிடம் இல்லாத பொருளை விலை கூறி விற்பதையும், கடையும் இல்லாமல் சரக்கும் இல்லாமல் தரகு வியாபாரம் செய்வதையும் செம்மல் நபியவர்கள் தடை செய்துள்ளார்கள். 'சந்தை நிலவரத்தை அறியாமலிருக்கும் ஒருவனது அறியாமையைப் பயன்படுத்திக் கூடாத பயனை அடையாதீர்' என்பதாகவும் எச்சரித்துள்ளார்கள். அவ்வாறே ஒரு பொருளை ரொக்க விலைக்குக் கொடுக்கும்போது குறைவாகவும், கடனாகக் கொடுக்கும்போது அதிகப்படுத்தியும் விற்பனை செய்தல் அடாது. ஒரு பொருளை ஒருவருக்கு விலை பேசி முடித்த பின் இன்னொருவருக்கு அதை விற்கக் கூடாது. மரத்தின் கனிகள் பழுத்துப் பக்குவமடைந்த பின்னரே விற்க வேண்டும். ஏனெனில் பூக்கள் உதிர்ந்து விட்டால் குத்தகைக்காரன் ஏமாற்றமடைவான். ஒரே விதமான பொருளில் இரண்டு விதமான விற்பனையும் தடை செய்யப்பட்டுள்ளது.

"நீங்கள் எதனை விற்கும்போதும் அளந்து விற்பீர்களாக. எதனை வாங்கும்போதும் அளந்து வாங்குவீர்களாக" "உங்களால் இயன்றவரை கடைவீதிக்குச் செல்வோரில் முதல்வராகவும் அங்கிருந்து வெளிப்படுவோரில் பிந்தியவராகவும் இருக்க வேண்டாம். ஏனெனில் திட்டமாக அது சைத்தானின் களமாகும். அங்குதான் அவனுடைய கொடி நாட்டப்பட்டுள்ளது" "நாற்பது நாட்கள் வரையிலுமோ அதற்கு மேலாகவோ உணவுப் பொருள்களை விலை உயர்வதற்காகப் பதுக்கி வைப்பவன் அல்லாஹ்வை விட்டு விலகிவிட்டான்" அல்லாஹ்வும் அவனைக் காப்பதிலிருந்து விலகிவிட்டான். வணிகத்தில்

நேர்மையைக் கையாண்டு வெற்றி பெறுவதற்கு நாயகக் கோமான் அவர்கள் உதிர்த்துள்ள உயர்மொழிகள் இருமையும் சிறப்பதற்குக் காரணமாக அமையுமென்பதில் ஐயமில்லை.

அளவுக் கருவிகள் வணிகத்தில் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. ''கொடுப்பதூஉம் குறைபடாது, கொள்வதூஉம் மிகை கொளாது பல்பண்டம் பகர்ந்து'' விற்றப் பண்டைக் கால வணிக முறையினை நம் இலக்கியங்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன. மத்யன் வாசிகள் பிறரிடமிருந்து பொருளை வாங்கும்போது அதிகமாக வாங்கியும், கொடுக்கும்பேது குறைவாகக் கொடுத்தும் வந்ததை இறைதூதர் ஷுஐப் (அலை) அவர்கள் எடுத்துரைத்தும் திருந்திக் கொள்ளாததால், அங்கு நிலநடுக்கமுண்டாகி, மக்கள் வாழ்ந்த சின்னமே தெரியாமல் அழிந்தொழிந்ததை அருள்மறை எடுத்துக்காட்டுகின்றது.

நிறுவைக் கருவிக்கு அறபு மொழியில் ''மீஸான்'' என்பது பெயர். நம் வணிக முறை மீஸானை மீறாமல் இருக்க வேண்டும். இறுதி நாளிலும் மீஸானிலேதான் நம் நன்மை தீமைகள் அளவிடப்படுகின்றன. ''மாமறையின் மணமகன்'' எனும் சிறப்பு வாய்ந்த சூறா ''அர்ரஹ்மானில்'' மீஸானைப் பற்றிய குறிப்பு அமைந்துள்ளது. ''அவனே வானத்தை உயர்த்தி மீஸானை (துலாக்கோலை) நிலைநாட்டினான், நீங்கள் நிறையில் வரம்பு மீறாதிருக்கும் பொருட்டு. ஆகவே நீங்கள் நீதமாக நிறுங்கள், எடையைக் குறைத்து விடாதீர்கள்.'' (55-7,8)

''தத்ஃபீஃப்'' (அளவில் மோசம் செய்தல்) என்னும் பெயர் பூண்ட ஒரு அத்தியாயமே அருள் மறையில் இடம் பெற்றுள்ளது. அதன் தொடக்கமே ஒரு நடுக்கத்தை விளைக்கும். ''அளவில் மோசம் செய்பவர்களுக்குக் கேடுதான். அவர்கள் மனிதர்களிடம் அளந்து வாங்கினால் நிறைய அளந்து கொள்கின்றனர். பிறருக்கு அவர்கள் அளந்து கொடுத்தாலும் அல்லது பிறருக்கு நிறுத்துக் கொடுத்தாலும் குறைந்து விடுகின்றனர். மகத்தான ஒரு நாளில் நிச்சயமாக அவர்கள் எழுப்பப்படுவார்கள், என்பதை அவர்கள் நம்பவில்லையா?'' (83-1-5) என்னும் வினாவுடன் முடிவடையும் இப்பகுதி, வணிகர்கள் நெஞ்சிலும் கடையிலும் பொறித்து வைக்கவேண்டிய பொன்மொழியாகும். விளம்பரத்திற்காகப் பிற தொடர்களை எழுதி வைத்து ஏமாற்றுவதை விட இத்தொடரைப் பொறித்து வைத்தல் இறையருள் சுரப்பதற்கு வழிகாட்டும்.

''நீங்கள் அளந்தால் பூரணமாக அளவுங்கள். சரியான எடையைக் கொண்டு நிறுங்கள். இது உங்களுக்கு மிக்க நன்று, மிக்க அழகான பயனைத் தரும்'' (17-85)

''அளவைப் பூரணமாக அளவுங்கள். அவற்றைக் குறைப்போராக இருக்க வேண்டாம்.'' (26- 181)

*(இனிமை பரவும்)*

# காஜா பந்தா நவாஸ் (ரஹ்)

மாபெரும் இறைநேசச் செல்வரான சிராஜ் தெஹ்லவீ (ரஹ்) அவர்கள் சுல்தானுடன் கருத்து வேறுபாடுற்று டில்லிமாநகரை விட்டு டஹ்டா என்ற ஊருக்குப் பல்லக்கின் மீது சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அமர்ந்திருந்த பல்லக்கைச் சுமந்து சென்ற அவர்களின் மாணவர் ஒருவரின் தலைமுடி அப்பல்லக்கின் கொம்பில் சிக்கி சொல்லொணா வருத்தத்தை அவருக்கு நல்கிக் கொண்டிருக்கிறது. எனினும் அவர் சிறிதேனும் முக்கவோ முனகவோ செய்யாது பல்லக்கைச் சுமந்து கொண்டு செல்கிறார். அவருடைய தலையிலிருந்து இரத்தம் கசிந்து முகத்திலே வழிந்து கொண்டிருக்கிறது. இந்நிலையிலேயே அவர் பல்லக்கைச் சுமந்து சென்று கொண்டே இருக்கிறார். தம் ஆசானுக்குச் சிறிது அசைவும் ஏற்பட்டுவிடக் கூடாதென்று எண்ணி அவர் பல்லக்கின் கொம்பைத் தம்முடைய வேறு புயத்திற்குக்கூட மாற்றவில்லை.

அவர்கள் கர்நூல் என்ற ஊரின் எல்லையை அடைந்த பொழுது அங்கு அடங்கப் பெற்றிருக்கும் ஷைகு முஹம்மது கர்நூலி (ரஹ்) அவர்கள் சிராஹ் தெஹ்லவீ (ரஹ்) அவர்களுக்கு ஆன்மீக முறையில் ‘ஸலாம்’ கூறி இச்செய்தியை அறிவிக்கின்றனர். உடனே பல்லக்கைக் கீழே வைக்குமாறு கூறிய சிராஹ் தெஹ்லவீ (ரஹ்) அவர்கள் அதிலிருந்து இறங்கித் தம் மாணவரை நோக்கி, “ஏ பாபா நலமாக இருக்கிறீரா?” என்று வினவுகிறார்கள். அதற்கு அவர் “ஆம்! நலமாக இருக்கிறேன்” என்று விடையிறுக்கின்றார். அப்பொழுது அவரின் சகோதரர் மகன் சையிது அலாவுத்தீன் குறுக்கிட்டு, “ஷைகு அவர்களே! அவர்களின் தலைமுடி பல்லக்கின் கொம்பில் சிக்கிச் சுழன்று விட்டது. அதன் காரணமாக இரத்தம் கசிந்து வழிந்தோடுகிறது. எனினும் மரியாதைக்காக அவர் பல்லக்கின் கொம்பைத் தம்முடைய வேறு புயத்தில் கூட மாற்றாது இதுகாறும் பல்லக்கைச் சுமந்து வந்திருக்கிறார்” என்று கூறுகிறார். அதுகேட்டு உணர்ச்சி மீக்குற்ற சிராஹ் தெஹ்லவீ (ரஹ்) அவர்கள் தம் மாணவரை மார்புறத் தழுவி “எவரேனும் இந்த சையிது முஹம்மதுக்கு அடிமையாகிவிடின் அவர் திட்டமாக இறைகாதலரின் தகுதியை எய்தப் பெறுவார். இவருடைய தோற்றமே அடியார்களுக்கு நற்பேற்றினை நல்குவதாயுள்ளது. இவர் பந்தா நவாஸாக (அடியார்களின் நற்பேறாக) உள்ளார்” என்று பார்ஸியில் பண்ணிசைக்கிறார்கள். ஆம்; அவர்கள் அருள்வாய் மலர்ந்த வண்ணம் சையிது முஹம்மதின் தோற்றம் பிற்காலத்தில் இறைவனின் நல்லடியார்களுக்கு நற்பேறாக அமைந்தது.

சையிது முஹம்மது பந்தா நவாஸ் (ரலி) அவர்கள் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களின் வழி வந்தவராவர். அவர்களின் மூதாதையர் 'ஹராத்' என்ற ஊரிலிருந்து இந்தியா வந்து டில்லியில் குடியேறி வாழ்ந்தனர். அக்குடியில் தோன்றிய சையிது யூசுஃப் ஹுஸைனி (ரஹ்) அவர்கள், நிஜாமுத்தீன் ஒளலியாவின் ஆன்மீக மாணவராக இருந்தனர். அவர்கள் செய்த அருந்தவத்தின் பெரும் பயனாக சையிது முஹம்மது பந்தா நவாஸ் (ரஹ்) அவர்கள் ஹிஜ்ரி 720 ஆம் ஆண்டு ரஜபு மாதம் 4 ஆம் நாள் டில்லி மாநகரில் பிறந்தனர்.

அப்பொழுது முஹம்மது பின் துக்ளக் டில்லி அரியணை மீது வீற்றிருந்து ஆட்சி செய்து கொண்டிருந்தார். அவர் தம் தலைநகரை தேவகிரி என்ற தௌலத்தா பாதிற்கு மாற்ற விரும்பி டில்லியிலுள்ள அனைவரையும் அங்குக் குடியேறுமாறு ஆணையிட்டார். அரச ஆணையை ஏற்று ஏனையோருடன் சேர்ந்து சையது யூசுஃப் ஹுஸைனி (ரஹ்) அவர்களும் தம் குடும்பத்தினரை அழைத்துக் கொண்டு ஹிஜ்ரி 725 ஆம் ஆண்டு ரமலான் மாதம் 21 ஆம் நாள் டில்லியை விட்டுக் கால்நடையாகப் புறப்பட்டு ஹிஜ்ரி 726 ஆம் ஆண்டு முஹர்ரம் மாதம் பதினேழாம் தேதி வியாழக்கிழமை தௌலத்தா பாத் வந்து சேர்ந்தனர். அங்கு அவர்கள் தம் மனைவியின் சகோதரரும் அம்மாநில ஆளுநராகவும் இருந்த மலிக்குல் உமரா சையிது இப்ராஹீம் முஸதவ்பீயின் இல்லத்தில் தங்கியிருந்தனர்.

தௌலத்தாபாதில் ஷைகு பாபு என்ற ஆன்மீக ஞானி ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருக்கும் அவர்களின் தந்தையாருக்கும் நட்பு ஏற்பட்டது. தந்தையார் அப்பெரியாரைக் காணச் செல்லுந்தோறெல்லாம் தம் தனயரையும் தம்முடன் அழைத்துச் செல்வார். சிறுவரை ஷைகு பாபு அன்பால் தழுவி அரிய அறிவுரைகளெல்லாம் பகர்ந்து வந்தார். அவை சிறுவரின் பிஞ்சு உள்ளத்தில் நன்கு பதிந்து முளையிட்டு வளரலாயின.

இளம் வயதில் தம் அன்னையிடமும் தம் தாய் வழிப்பாட்டனாரிடமும் குர்ஆனை ஓதி மனனம் செய்த பந்தா நவாஸ் (ரஹ்) அவர்கள் அப்பொழுதே விலாயத் எய்தப் பெற்றிருந்தனர். தொழுகையை நேரம் தவறாது பக்தி சிரத்தையுடன் தொழுது வந்தார்கள். அவர்களின் மாணிக்க நற்பண்புகளைக் கண்டு வியந்த அவர்களின் வயதொத்த சிறுவர்கள் அவர்களுக்கு ஊழியர்கள் போன்று பணிபுரிந்து வந்தார்கள். தம்மீது அன்பும் பக்தியும் செலுத்தி வந்த அச்சிறுவர்கள் மீது பந்தா நவாஸ் (ரஹ்) அவர்களும் அன்பு செலுத்தித் தம்மால் இயன்ற அன்பளிப்புகளைச் செய்து வந்தனர்.

தௌலத்தாபாதில் அவர்கள் மார்க்க நூல்களை ஓதிக் கொண்டிருக்கும் பொழுது ஒருவர் அவர்களிடம் வந்து, “தொழுகையில் ருகூவுவிலிருந்து சஜதாவுக்குச் செல்லும் பொழுது முதலில் தரையின் மீது கைகளை வைக்கிறதா? அல்லது முட்டுக் கால்களை வைக்கிறதா? சஜதாவைவிட்டு நிலைக்கு வரும் பொழுது முதலில் கையை எடுக்கிறதா? அல்லது முட்டுக் கால்களை எடுக்கிறதா?” என்று வினவினார். அதற்கு அவர்கள் “இதுபற்றிச் சிந்தித்துக் கூறுகிறேன்” என்று பதிலுரைத்தனர். அவர் சென்று விட்டார்.

சற்று நேரத்தில் ஒரு பெரியார் பள்ளிவாசலுக்கு வந்து இரண்டு ‘ரகஅத்’ தொழுதார். அவர் தொழுவதை அவர்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்கள். முன்னர் வந்து கேள்வி கேட்டவரின் கேள்விக்கான பதில் அவர்களுக்குத் தெளிவாக தெரிந்துவிட்டது. தொழுத பெரியாரும் தொழுது முடித்து அடுத்தகணம் திடீரென மறைந்துவிட்டார். இது அவர்களுக்கு அளவற்ற வியப்பை அளித்தது, உடனே அவர்கள் தம் பாட்டனாரிடம் ஓடோடிச் சென்று செய்தியைக் கூறி அப்பெரியாரின் அங்க அடையாளங்களை விவரமாக எடுத்துரைத்தனர். அதுகேட்டு ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிய அம்முதியவர், “அவர்கள் என் ஆன்மீக ஆசான் மஹ்பூபெ இலாஹி நிஜாமுத்தீன் ஔலியாவாக இருப்பர்” என்று கூறினார்.

அதுகேட்டு பந்தா நவாஸ் (ரஹ்) அவர்களின் கண்கள் வியப்பால் விரிந்தன. மஹ்பூபெ இலாஹி நிஜாமுத்தீன் ஔலியா, மஹ்பூபெ இலாஹி நிஜாமுத்தீன் ஔலியா என்றே அவர்களின் இதயம் துடித்தது. அவர்களை என்று தரிசித்து தீட்சை பெறுவோம் என்று அவர்களின் உள்ளம் ஏங்கிற்று. “அவர்கள் டில்லியிலல்லவோ இருக்கிறார்கள் நான் தௌலத்தாபாதிலல்லவோ உள்ளேன் என் செய்வேன்!” என்று அவர்கள் நைந்துருகினார்கள்.

இதன்பின் சில ஆண்டுகள் கழித்து நிஜாமுத்தீன் ஔலியா அவர்கள் நிர்யாணம் அடைந்துவிட்டார்கள் என்ற செய்தி டில்லியிருந்து வந்ததும் அவர்களுக்கு ஏற்பட்ட வருத்தத்திற்கோர் அளவில்லை. எனினும் பாதகமில்லை. அவர்களின் ஆன்மீக மாணவரான சிராஹ் தெஹ்லவீயிடமாவது சென்று தீட்சை பெறுவோம் என்று அவர்கள் தமக்கே தாம் ஆறுதல் கூறிக் கொண்டார்கள்.

பந்தா நவாஸ் (ரஹ்) அவர்களுக்குப் பதினைந்து வயதான பொழுது அவர்களின் தந்தையார் இறப்பெய்தினர். இதற்குப்பின் அவர்களின் அன்னைக்கும் அவரின் சகோதரருக்கும் மனக்கசப்பு ஏற்பட்டதன் காரணமாக அன்னை தம் மைந்தரை அழைத்துக் கொண்டு டில்லி வந்து சேர்ந்தார்.

ஒரு வெள்ளிக்கிழமை பந்தா நவாஸ் (ரஹ்) அவர்கள் தொழுவதற்காகப் பள்ளிவாசல் சென்றார்கள். அங்குத் தொலைவில் சிராஜ் தெஹ்லவீ (ரஹ்) அவர்கள் வீற்றிருப்பதையும் அவர்களின் முகத்தில் அருள் ஒளி இலங்கிக் கொண்டிருப்பதையும் கண்டு அவர்கள் இறைவனின் அருள்பெற்ற 'வலி' தாம் என்ற எண்ணம் அவர்களின் உள்ளத்தில் உறுதிப்பட்டது. இதன்பின் அவர்கள் சிராஜ் தெஹ்லவீ (ரஹ்) அவர்களிடம் தீட்சை பெறுவதற்காகத் தம் அண்ணன் சையிது சந்தாருடன் சிராஜ் தெஹ்லவீ (ரஹ்) அவர்களின் தவமடம் சென்றார்கள்.

அப்பொழுது தவமடத்தின் மேல் மாடியில் இருந்த சிராஜ் தெஹ்லவீ (ரஹ்) அவர்கள் பந்தா நவாஸ் (ரஹ்) அவர்கள் வந்திருப்பதைத் தம் உள்ளுணர்வால் விளங்கி "சையிது முஹம்மதை அழைத்துவா" என்று தம் ஊழியரிடம் கூறினர். அப்பொழுது கீழே பலர் சையது முஹம்மது என்ற பெயருடன் இருப்பதைக் கண்டு "எந்த சையிது முஹம்மதை அழைத்து வரச் சொல்கிறீர்கள்?" என்று ஊழியர் வந்து சிராஜ் தெஹ்லவீ (ரஹ்) அவர்களிடம் வினவ "சையது முஹம்மது கேசுதராஸை (நீளமுடியுள்ள சையிது முஹம்மதை) அழைத்து வாரும்" என்றார்கள். அவ்விதமே அவர் வந்து நீளமாக முடி வளர்த்திருந்த பந்தா நவாஸ் (ரஹ்) அவர்களை மாடிக்கு அழைத்துச் சென்றார். அதிலிருந்து அவர்களுக்கு கேசுதராஸ் என்ற சிறப்புப் பெயரும் ஏற்பட்டது. இது நிகழ்ந்தது ஹிஜ்ரி 736 ஆம் ஆண்டு ரஜப் மாதம் மூன்றாம் நாளிலாகும்.

தீட்சை பெற்ற அன்றையத் தினத்திலிருந்து பெரிதும் பேணுதலுடன் வணக்க, வழிபாடுகளில் ஈடுபட்ட அவர்கள் உயரிய மார்க்கக் கல்வியையும் கற்க விரும்பி அங்கு வாழ்ந்து வந்த மௌலானா ஷர்புத்தீன் கதீலி, மௌலானா தாஜுத்தீன் அப்துல் முக்ததிர் ஆகிய மார்க்க மேதைகளை அணுகி, அவர்களிடம் அவற்றைக் கற்று வந்தார்கள். எனினும் ஆன்மீகத் துறையில் அவர்களுக்கு இருந்த ஆர்வம் ஏற்படவில்லை. இதனை அவர்கள் தம் ஆன்மீக ஆசான் சிராஜ் தெஹ்லவீ (ரஹ்) அவர்களிடம் எடுத்துரைத்து மார்க்கக் கல்வி பயில்வதை அத்துடன் நிறுத்திவிடலாமா என்றும் வினவினார்கள். "வேண்டாம்; வேண்டாம். ஹிதாயா, பாஜ்ரி, ஷம்ஸிய்யா, கஷ்ஷாப், மிஸ்பாஹ் முதலிய நூல்களை மிகவும் விளக்கத்துடன் ஓதி முடிப்பீராக. உம்மிடமிருந்து நான் மிகப்பெரும் ஒன்றை எதிர்பார்க்கிறேன்" என்று பதிலுரைத்தார்கள் அவர்களின் ஆசான். ஆனால் அந்த மிகப்பெரும் ஒன்று யாது என்று அவர்கள் கூறவில்லை.

தம் ஆசானின் அறிவுரைப்படி அந்நூல்களையெல்லாம் விரைவில் கற்றுத் தேர்ந்து சிறந்த 'ஆலிம்' ஆன பந்தா நவாஸ் (ரஹ்) அவர்கள் தம் ஆசானிடம்

மாலை நேரத்தில் சென்று அவர்களைக் கண்டு வரும் வழக்கத்தை மேற் கொண்டிருந்தனர். ஒருநாள் ஆசான், அவர்களை நோக்கி, "நீர் எப்பெழுது பார்த்தாலும் மாலை நேரத்தில் வந்து கொண்டிருக்கிறீர். அப்பொழுது நான் ஆன்மீக விசாரத்தில் மூழ்கியுள்ளேன். நான் உம்முடன் பேச விரும்புகிறேன். ஆதலின் நீர் காலையில் வந்தால் நல்லது" என்று கூறினர்.

அதுகேட்டுப் பெரிதும் வியப்புற்ற பந்தா நவாஸ் (ரஹ்) அவர்கள் "தாங்கள் என்னிடமுமா பேச விரும்புகிறீர்கள்?" என்று வினவினர்.

"ஆம்" என்று ஒரே சொல்லில் மறுமொழி பகர்ந்தார்கள் ஆசான். அந்த ஒரு சொல்லில் "அந்த மிகப்பெரும் ஒன்றிற்காக நான் உமக்குப் பயிற்சியளிக்கப் போகிறேன்" என்ற பதிலும் மறைந்து கிடந்தது.

அடுத்த நாள் 'இஷ்ராக்' தொழுதபின் பந்தா நவாஸ் (ரஹ்) அவர்கள் தம் ஆசானைச் சந்திக்கச் சென்ற பொழுது, "நீர் வைகறைத் தொழுகைக்காகச் செய்யும் உளூவுடன் பொழுது புலரும் வரை இருக்கின்றீரா?" என்று ஆசான் தம் மாணவரை வினவினர்.

ஆம் இருக்கிறேன் என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

"அவ்விதமாயின் 'இஷ்ராக்' இரண்டு 'ரகஅத்' தொழுது வருவீராக!" என்று ஆசான் கூறினர்.

"நல்லது அவ்விதமே செய்கிறேன்" என்று அவர்கள் தாழ்மையுடன் பதிலுரைத்தார்கள்.

பின்னர் ஆசான் தம் மாணவரை நோக்கி, "அதற்குப் பின் 'ஷுக்ருந் நகார்' (பகலின் நன்றி) தொழுகையாக இரண்டு ரகஅத் தொழுது வாரும்" என்று கூறினார். மாணவரும் அதற்கு இசைந்தார்கள்.

சின்னாட்கள் கழித்து சிராஹ் தெஹ்லவீ (ரஹ்) அவர்கள் தம் மாணவரை நோக்கி "நான் கூறிய வண்ணம் செய்து வருகின்றீரா?" என்று வினவினர். "ஆம்" என்று அவர்கள் பதில் கூறியதும் "அவற்றுடன் ளுஹா நான்கு ரக்அத்துகள் தொழுதுவாரும். அதனை இஷ்ராக் தொழுதவுடன் தொழுதாலும் அது நிறைவேறிவிடும்" என்று அருள்மொழி பகர்ந்தார்கள். *(வரலாறு வளரும்)*

---

♦ ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கஸ்தூரி உணவு அவர்களுக்கு உரித்தான (சொந்தமான) உணவு ஆகும்.

# பெருமானார் காலப் பெண்மணிகள்

தொழுகையைப் போலவே நோன்பு பிடிப்பதிலும் இப்பெண்மணிகள் அதி தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். நோன்பு வைக்கக்கூடாத நாட்களையன்றி மற்ற நாட்களிலெல்லாம் வருஷம் முழுவதுமே நோன்பு பிடித்தும் வந்துள்ளனர். நோன்பு பிடிப்பதன் முக்கியத்துவத்தை அவர்கள் நபிபெருமானைப் பார்த்தே தெரிந்துகொண்டனர். அத்துடன் அவர்களே பலருக்கும் நோன்பு பிடிக்குமாறும் உபதேமசித்துள்ளனர். அபூ உமாமா என்ற தோழர் தாம் வீரமரணமடைவதற்காகப் பிரார்த்திக்குமாறு நபிபெருமானாரிடம் வேண்டினார். அவர்கள் அவருடைய நல் வாழ்வுக்காகப் பிரார்த்தித்தார்கள். பல தடவைகளில் அவர் இவ்விதம் வேண்டியபோதெல்லாம் நபிபெருமானார் நல்வாழ்வுக்காகவே பிராத்தித்தார்கள். பின்னர் ஒரு தடவை அவர் அவர்களிடம் வந்து, மிகவும் பயனுள்ள வணக்கம் ஒன்றைத் தமக்கு அறிவித்துத் தருமாறு வேண்டினார். உடனே அவரை நோன்பு நோற்குமாறு அவர்கள் ஏவினார்கள். இதைக் கண்ட அபூ உமாமாவின் மனைவியும், பணிப் பெண்ணுங்கூட நோன்பு நோற்கத் தொடங்கிவிட்டனர். நோன்பு நோற்பதில் அந்தக் குடும்பமே சளையாது ஈடுபட்டுவிட்டது. எப்போதாவது பகலில் அவர் வீட்டில் அடுப்புப் புகைந்தால், அங்கே விருந்தாளிகள் வந்திருக்கிறார்கள் என்று அண்டை வீட்டார்கள் புரிந்து கொள்வார்கள்.

இதுபோன்று பெரும்பாலான ஸஹாபிப் பெண்கள் இஷ்டப்பூர்வமான (நபிலான) நோன்புகளை நேற்பதில் தீவிரமாக ஈடுபடலாயினர். இதனால் இடைஞ்சலுக்குள்ளான அவர்களுடைய கணவர்கள் ஒரு தடவை இதுபற்றி நபிபெருமானாரிடம் வந்து முறையிட்டனர். உடனே, நபிபெருமானாரும், “பெண்கள் தமது கணவரின் அனுமதி பெற்றே இஷ்டப்பூர்வமான நோன்புகளை நோற்க வேண்டும்” என்று கட்டளையிட்டு விட்டார்கள்.

ஸஹாபிப் பெண்களில் பலர் ரமலான் மாதத்தில் தனியாக ஒரு கூடாரமடித்து அதிலிருந்து கொண்டு நோன்பு நோற்றிருக்கின்றனர். இவர்களில் சிலர் காலமானவர்கள் நோற்றிருக்க வேண்டிய நோன்பையும் அவர்களுக்காக நோற்றுள்ளனர். பெண்மணியொருவர் நபிபெருமானாரை அணுகி, “என் தாய் மீது நோன்பு கடமையான நிலையையில் அவைகளை அவர்பூர்த்தி செய்யாமல் காலமாகி விட்டார். நான் அந்த நோன்பை நிறைவேற்றலாமா?” என்று வினவினார். நிறைவேற்றலாம் என்று நபிபெருமானார் அந்தப் பெண்மணிக்கு அனுமதியளித்தார்கள்.

ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றுவதிலும் அவர்கள் ஸஹாபி ஆடவர்களுக்குச் சளைத்தவர்களாயில்லை. மேலும், ஹஜ்ஜு செய்வதற்குத் தேகதிடனற்ற தங்களுடைய பெற்றோர்களுக்காகவும் அவர்கள் ஹஜ்ஜு செய்து வந்துள்ளனர்.

ஸஹாபிப் பெண்மணிகள் தருமசிந்தை நிறைந்தவர்களாகவும் மிளிர்ந்துள்ளனர். அவர்கள் தாங்கள் கொடுக்க வேண்டிய 'ஜகாத்' என்ற ஏழை வரியைச் சரிவரக் கொடுத்து வந்துள்ளனர். ஒரு சமயம் ஸஹாபிப் பெண்மணி ஒருவர் தம் குழந்தையைத் தூக்கிக் கொண்டு நபிபெருமான் (ஸல்) அவர்களிடம் வந்தார். அந்தக் குழந்தையின் கைகளில் தங்கக் காப்புகள் போடப்பட்டிருந்தன. அதைப் பார்த்த நபிபெருமான், "இந்தக் காப்புகளுக்கான ஜகாத்தைக் கொடுத்து விட்டீர்களா?" என்று வினவினார்கள். அந்தப் பெண்மணி இல்லை என்று கூறவே, "ஜகாத் கொடுக்கப்படாத நகைகளுக்காக நியாயத் தீர்ப்பு நாளில் அல்லாஹ் அதன் கைகளில் நெருப்புக் காப்புகளை அணிவிப்பான்" என்று நபிபெருமான் அறிவித்தார்கள். உடனே அந்தப் பெண்மணி குழந்தையின் கைகளில் கிடந்த காப்புக்களைக் கழற்றி நபிபெருமானாரிடம் கொடுத்து, "இவை அல்லா(ஹ்)வுக்கும், அவன் திருத்தூதருக்கும் சொந்தமானவை" என்று சொல்லி விட்டார்.

ஈதுப் பெருநாள் ஒன்றிலே நபிபெருமான் (ஸல்) அவர்கள் தானதருமஞ் செய்யவேண்டிய அவசியம் பற்றிப் பிரசங்கம் (குத்பா) நிகழ்த்தினார்கள். அது சமயம் ஹஜ்ரத் பிலால் (ரலி) ஒரு துணியை விரித்துப் பிடித்துக் கொண்டு நின்றார். ஸஹாபிப் பெண்மணிகள் காது வாளிகளையும், கழுத்தணிகளையும், மோதிரங்களையும் கழற்றிப் பிலால் பிடித்திருந்த துணியில் போட்டுக் கொண்டிருந்தார்கள். பிரசங்கம் முடிந்து பெண்கள் இருந்த பக்கம் இறங்கிச் சென்ற நபிபெருமான் (ஸல்) அவர்கள் அங்கே ஹள்ரத் அஸ்மாவின் சிறிய தாயார் தங்கக் காப்பும், மோதிரங்களும் அணிந்திருப்பதைப் பார்த்து, "இவற்றுக்கான ஜகாத்தைச் செலுத்தி விட்டீர்களா?" என்று வினவினார்கள், அந்தப் பெண்மணி இல்லை எனவும், "மறுமையில் இறைவன் உங்களுக்கு நெருப்பாலான காப்புக்களையும், மோதிரங்களையும், அணிவிப்பதை விரும்புகிறீர்களா?" என்று கேட்டார்கள். உடனே அந்தப் பெண்மணி அவற்றைக் கழற்றி விட்டார்.

இந்தச் சமயத்தில் ஹஜ்ரத் அஸ்மா நபிபெருமானாரை அணுகி, "பெருமானாரே, நாங்கள் நகை அணியாவிடின் எங்கள் கணவர்கள் எங்களை மதிக்க மாட்டார்களே!" என்று முறையிட்டார். "அப்படியானால் வெள்ளி நகைகளில் சிறிது குங்குமத்தைத் தேய்த்து அணிந்து கொள்ளுங்கள். அவை தங்கத்தைப்போல் மின்னும்" என்று நபிபெருமானார் அருளினார்கள்.

தான தருமங்களில் சிறந்து விளங்கிய ஸஹாபிப் பெண்மணிகளுள் ஹள்ரத் அஸ்மா மிகவும் முக்கியமான இடம்பெற்றுள்ளார். ஹள்ரத் அபூபக்கர் (ரலி)யின் புதல்வியும், ஹள்ரத் ஆயிஷா நாயகியின் சகோதரியும், ஹள்ரத் ஜுபைரின் மனைவியும், ஹள்ரத் அப்துல்லா(ஹ்)வின் அன்னையுமான இந்தப் பெருமாட்டி எத்தகைய கஷ்டத்திலும் நிலைகுலையா வைர நெஞ்சு படைத்தவராக விளங்கினார். எனினும், ஏழைகள் விஷயத்தில் அவர் மிகவும் இளகியமனமுடையவராய் இருந்தார். ஒரு சமயம், அவர் ஏழைகளுக்குத் தருமமிடுவதற்காகத் தானியத்தை அளந்து கொண்டிருந்தார். அதுகாலை அங்கே வந்த நபிபெருமான் (ஸல்) அவர்கள் அவரை விளித்து, "அளந்து கொடுப்பவர்களுக்கு ஆண்டவனும் அளந்தே கொடுப்பான்" என்று அருளினார்கள். அன்று தொட்டு அளந்து தருமங்கொடுக்கும் பழக்கத்தை விட்டு விட்டார். அவர் ஒரு தடவை தமது அடிமையை விற்று வந்த பணம் முழுவதையும் தானதருமஞ் செய்வதற்காக நபிபெருமானாரிடம் ஒப்படைத்துவிட்டார். அவருடைய சகோதரியான ஹள்ரத் ஆயிஷா (ரலி) தமது மரணத் தருவாயில் தம் பங்கான நிலத்தைத் தமது தங்கை அஸ்மாவுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டார். உடனே அஸ்மா அதை ஒரு லக்ஷம் திர்ஹங்களுக்கு விற்றுத் தானதருமம் செய்துவிட்டார். தம்மிடமிருந்த அடிமைகளையும் உரிமைதந்து விடுதலைசெய்து அனுப்பி விட்டார். அவர் தமது சொத்து முழுமையுமே இவ்விதந்தான் நாளைக்கென்று வைத்திராமல் தருமஞ் செய்து வந்தார்.

உம்மு ஸலீம் என்ற ஸஹாபிப் பெண்மணி தம்முடைய பெரிய பேரீத்தந் தோட்டத்தையே நபிபெருமான் (ஸல்) அவர்களிடம் ஒப்படைத்து. அவர்கள் விரும்பும் விதம் அதைத் தானதருமத்திலீடுபடுத்திக் கொள்ளலாம் எனறு கூறிவிட்டார்.

உம்மு ஷரீக் என்ற ஸஹாபிப் பெண்மணி பெருஞ் செல்வச் சீமாட்டியாய்த் திகழ்ந்தார். இவர் இஸ்லாத்தின் மீது கொண்ட பற்றுதலால் தமது வீட்டையே ஒரு தரும சத்திரம் போல் ஆக்கிவிட்டார். நபிபெருமானாரின் எந்தச் சமயத்திலும், எத்தனை விருந்தினர்கள் வந்தாலும் உம்மு ஷரீக்கின் வீட்டுக்கு அனுப்பி வைத்து விடுவார்கள். புதிதாக முஸ்லிமானவர்களில் ஆதரவற்றிருந்தவர்களுக்கெல்லாம் இந்த அம்மாவின் வீடு புகலிடமாக விளங்கிற்று.

போதிய வசதியில்லாத பெண்கள் சிலர் தாம் கொடுக்கவேண்டிய தான தருமங்களைத் தமது கணவருக்கோ, உறவினருக்கோ கொடுத்துக் கொள்ளலாமா என்று ஒரு தடவை நபிபெருமானாரிடம் வினவினர். அவ்விதம் கொடுக்கலாம்

என்று அனுமதித்த நபிபெருமான் (ஸல்) அவர்கள், “அதன் மூலம் நீங்கள் தருமங் கொடுத்ததற்காக ஒன்றும், அதை உறவினருக்குக் கொடுத்ததற்காக ஒன்றுமாக இரண்டு நன்மைகள் உங்களுக்குக் கிடைக்கும்” என்று அருளினார்கள்.

ஹள்ரத் ஜைனப் தாம் ஏழையாய் இருப்பதால் தான தருமங்களை வழங்க இயலவில்லையே என்று நபி பெருமானாரிடம் வந்து குறைபட்டுக் கொண்டனர். அப்போது, “உமது கைத்தொழிலின் வருவாயைக் கொண்டு உமது கணவரையும், குழந்தைகளையும் பராமரித்து வாரும். அதுவும் பெரிய தருமந்தான்”. என நபிபெருமானார் அருளினார்கள். இந்தப் பெண்மணியைக் குறித்து, சன்மார்க்கச் சட்டதிட்டங்களைப் பூரணமாக ஏற்று புனிதமாக ஒழுகுவதிலும், தெய்வபக்தியிலும், சத்தியத்தை எடுத்துக் கூறுவதிலும், சுற்றத்தாரை ஆதரிப்பதிலும் ஜைனபை விடச் சிறந்த பெண்ணை நான் பார்க்கவில்லை என்று ஹஜ்ரத் ஆயிஷா நாயகி அறிவித்துள்ளார். தங்கள் நெருங்கிய உறவினர்கள் முஸ்லிமல்லாதவர்களாய் இருந்த நிலையிலுங்கூட அவர்களுக்கு. நபிபெருமானாரின் அனுமதியுடன், ஸஹாபிப் பெண்மணிகள் உதவி புரிந்துள்ளனர். ஹள்ரத் சுமய்யா தமது யூத உறவினருக்குத் தம்முடைய நிலம் ஒன்றையே பூதானமாக அளித்துவிட்டார்.

ஸஹாபிப் பெண்கள் தங்களுக்குள்ளும் அன்பளிப்புகளைப் பரிமாறிக்கொள்வதுண்டு. நஸீயா அன்சாரி என்ற பெண்மணி மிகவும் வறுமையான நிலையிலிருந்தார். எனினும், அவர் அடிக்கடி நபி பெருமானாருடைய பிராட்டியார்களுக்கு ஏதேனும் அன்பளிப்புகளை அனுப்பிக்கொண்டே இருந்தார். ஒருசமயம் அவருக்கு ஆடு ஒன்று கிடைத்தது. அதை அறுத்து, அதன் இறைச்சியை அன்னை ஆயிஷாவுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தனுப்பி விட்டார். பரீரா என்ற பெண்மணியும் இவ்விதம் கொடுத்து வந்துள்ளார்.

ஸஹாபிப் பெண்மணிகள் மற்றப் பெண்களுக்குத் தம்மால் இயன்ற உடல் சகாயத்தையும் செய்து வந்துள்ளார்கள். ஹள்ரத் அஸ்மாவுக்கு ரொட்டி தயாரிக்கத் தெரியாததால் அவருடைய அண்டைவீட்டுப் பெண்மணியொருவர் தினமும் வந்து அவருக்கு ரொட்டி தயாரித்துக் கொடுத்துவிட்டுப் போவார்.

பிணியுற்றவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதிலும் இந்தப் பெண்மணிகள் முக்கிய பங்கெடுத்துக்கொண்டுள்ளனர். ஒரு சமயம் அஹ்ல சுஃப்பாவில் ஸஹாபியொருவர் நோயுற்றிருந்தார். இதைக் கேள்விப்பட்ட உம்மு தர்தா என்ற பெண்மணி அந்த ஏழைப் பெரியாருக்கு வேண்டும் உதவிகளைச் செய்வதற்காகத் தினமும் தம் ஒட்டகத்தில் ஏறி அங்கே வந்துபோனார். உம்மு ஹஸலா என்ற பெண்மணியும், அவர் குடும்பத்தாருங்கூட இவ்விதம் பிணியுற்றவர்களுக்குப் பணியாற்றுவதில் புகழ் பெற்றவர்களாய் விளங்கினர்..

# சுயம் பிரகாசம்

*வழுத்தூர், அஸ்ஸையித். முஹம்மது தாஹிர் பாவா வலிய்யுல்லாஹ் ஹஸனீ, காதிரீ (ரலி) அவர்களின் சுயம்பிரகாசம் நூலிலிருந்து..*

சகலத்திலும் தேவ பரிசுத்த ஆவியானது நிறைந்திருக்கிறது. "ஆத்மே பரமாத்ம குரு"வென்று கிரந்தத்திலும், **"The soul is our first spiritual teacher"** என்று ஆங்கிலத்திலும் சொல்லப்படுகிறது. அதாவது ஆத்மாவே நம்முடைய பரமாத்மாவான குரு, அல்லது ஆத்மாவே நம்முடைய பரிசுத்த ஆவியாகிய முதல் ஆசான் இன்னும் அறபி பாஷையில் "மன்அரஃப நஃப்ஸஹு ஃபகத் அறஃப றப்பஹு" வென்று சொல்லப்படுகிறது. அதாவது தன்னை அல்லது தன் ஆத்மாவை அறிந்தவனே கடவுளை அறிந்துகொள்வான்!

**"Those who neglecting the God in their own hearts, seek then gods are like unto those who rejecting the lewel in their possession, are in anxious search of another."** அதாவது: தன் சொந்த இருதயத்திலே கடவுளைத் தேடாதவர்கள் வேறொரு கடவுளைத் தேடுகிறார்கள். இன்னும் அவர்கள் தன் வசமிருந்த ஆபரணத்தை இழந்து விட்டு மற்றவர்களிடம் தேடி விசாரப்பட்டவர்களுக்கு தகுமாயிருக்கிறார்கள்.

**"As the fire in wood, fragrance in flower, and virtue in water, so the divine soul is manifester in the living body."** அதாவது விறகில் அக்னியைப்போலும், புஷ்பத்தில் வாசனையைப் போலும், ஜலத்தில் இன்பமல்லது தெளிவைப் போலும் தேவ ஆவியானது நாம் வசிக்கும் சரீரத்தில் வெளியாயிருக்கிறது.

**"He is not lost to me, and I am not lost him, who beholds me in every place, and discern me in every object."** அதாவது: அவன் என்னை இழக்கவில்லை. நான் அவனை இழந்துவிடவில்லை. ஒவ்வொரு இடத்திலும் என்னைத் தேடுகிறவர்கள், ஒவ்வொரு வஸ்திலும் என்னைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

**"Hope not destined to be fulfilled."** அதாவது "விதிப்படி முடியுமென்பதை நம்பக்கூடாது." ஏனென்றால், இந்த எண்ணமானது அனேகரை முன்னுக்கேறாமல் தடுத்துவிட்டது. அறிவாளிகளும், ஞானவான்களும் இந்த எண்ணத்தில் சிக்கவே இல்லை. இந்தக் கொடும்விஷமாகிய எண்ணத்தில் சிக்கினவர்கள் கடைத்தேறவேயில்லை!

நாம் கடவுளாயிருக்கிறோம், கடவுள் நாமாயிருக்கிறோம். நம்மால் ஆகாததும் கடவுளால் ஆகாததும் ஒன்றுமில்லை. நம்மில் கடவுளிருக்கிறார். கடவுளில் நாமிருக்கிறோம். அவரை விட்டு நாம் நீங்கவில்லை. நம்மைவிட்டு அவர் நீங்கவில்லை என்று எப்போதும் சிந்தித்து வருவதே தபங்களில் மிகவும் சிறந்தது. இந்த இரகசியத்தை எல்லோரும் அறியமாட்டார்கள். அறிந்தவர்கள் பிறருக்குச் சொல்லப்பயந்து மறைக்கிறார்கள்.

நாம் கடவுளென்று தியானித்து வருவதால் உண்டாகின்ற பலன் யாதெனில் இந்த தியானமுள்ளவர்கள் கடவுளுக்கு மிக உவப்பானவர்களென்றும், கடவுளின் கருணையும் குணமும் இவர்களின் பேரில் தாவி இவர்கள் அங்கத்தைப் பங்கமாக்கித் தன்னோடு சேர்த்துக் கொள்கிறதென்றும், கடவுளின் தத்துவம் இவர்கள் மூலமாக வெளியாகுமென்றும், இவர்கள் கடவுளுக்கு மிவும் நெருங்கினவர்களென்றும், இவர்கள் எவ்விதம் இவ்வுலகத்தில் வசிக்க வரும்புகிறார்களோ அவ்விதமே கடவுள் அவர்களுக்கு உதவி புரிகிறாரென்றும், கடவுள் இவர்கள் சித்தத்திற்கு ஒருபோதும் மாறு செய்கிறதில்லை என்றும் பிரம ஞானிகள் கூறுகின்றனர். இவர்கள் மகத்துவத்தை யாரால் சொல்லக்கூடும்? இவர்களுடைய செயலுக்கு யாதொரு குணமுமில்லை. ஏனென்றால், இவர்கள் செய்கிற நன்மையும் தீமையும் குணமற்றது. இவர்களுடைய செயல் கடவுளுடைய செயலாக இருக்கிறது. இவர்கள் தன் சித்தத்திற்கு யாதொருபாவமும், நன்மையும் செய்கிறதில்லை. ஆகையால், நன்மையும் தீமையும் இவர்களைத் தொடரக் காரணமில்லை. இவர்கள் ஒருபோதும் தன் இச்சைக்கு யாதொரு காரியமும் செய்கிறதில்லை. இவர்கள் அடி, நடு, முடிவில்லாத இந்த அகண்ட ஆகாயத்தை போல், தன்னை மட்டுப்படாத அரூபியாகச் சிந்தித்துத் தன் சரீரத்தை மறந்திருக்கிறார்கள். இவர்களுக்குக் கொஞ்சமும் அகங்காரமில்லை, இவர்கள் அகங்காரம் கடவுளுடைய அகங்காரமாயிருக்கிறது. இவர்களை ஏசினால், அல்லது நிந்தித்தால் கடவுள் பொருத்தக் கேடாகிறார். இவர்களை கனம் பண்ணினால் கடவுளின் அன்புண்டாகிறது. இவர்கள் செய்து வருகிற அனுஷ்டானத்தினால் சித்தம் வலுவாகி ஆத்ம குணம் அதிகரித்து அனேக அற்புதங்களைச் செய்யத்தக்கவர்களாகிறார்கள்.

மெஸ்மரிஸ வித்தையை இந்த முக்தர்களே முற்றிலும் உணர்ந்தவர்கள் சித்திக்கும் முக்திக்கும் அனேக அப்பியாசங்களும், சாதனைகளுமுண்டு. அவைகளில் மிகச் சிறந்ததும், அதிக வலுவானதும் இதுவே ஏனென்றால், நம்முடைய மனம் எந்த வஸ்தை நாடுகிறதோ, அதில் போய் கலக்கிறதும்

லயிக்கிறதும், அல்லது அந்த அந்த வஸ்தாகத்தான் ஆகிக்கொள்கிறதும் அதன் சுபாவம். உள்ள வஸ்தை நாடினால் அதில் போய் கலந்து, அதை வம்பித்து அல்லது இழுத்துத் தனக்குக் கீழ்ப்படுத்திக் கொள்கிறதும், இல்லாத வஸ்தை நாடினால் நாடப்பட்ட வஸ்துவாகத் தானே வெளியாகிறதும் அதன் சுய குணம். ஆகையால், இந்த இயற்கையை அறிந்தே தபங்களையும் யோகங்களையும் பல விதமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதன் விபரங்களைப் பின்னால் விவரிக்கப்படும். தன்னை பிரமமல்லது கடவுளென்று சிந்திப்பவர்களுக்குத் தன் சரீரம் ஞாபகமிருக்கிற வரையில் நன்மையும் தீமையும் தொடரும். அவர்களின் செயல் கடவுளின் செயலாகாது. வேற்றுமையான அவர்களின் அகங்காரத்தின் செயலாகும் இந்த வேற்றுமையான யானென்னும் அகங்காரத்தைச் சுட்டெரித்தவர்களில், கடவுள் தன் நீதத்துக்கு விரோதமாக யாதொரு செயலையும் வெளியாக்கிறதில்லை. இவர்களைப் பாவம் செய்யத் திராணி அற்றவர்கள், நன்மையை மட்டும் செய்ய இயன்றவர்களென்று சொல்லலாம். ஒரு சமயம் நமது சிற்றறிவுக்கு அவர்கள் செயல் விரோதமாகத் தோன்றலாம். ஆனால், அவர்கள் கடவுளின் உத்தரவுக்கும், நீதத்துக்கும் விரோதமாக ஒருபோதும் நடக்கிறது இல்லை. அவர்களால் உலகத்தார்களுக்கு உண்டாகின்ற தன்மையையும், பலனையும் சொல்ல இயலாது.

என்கிலும், அஞ்ஞானமாகிய நானென்னும் வேற்றுமையான அகங்காரத்தை அழிக்காதவர்கள், கடவுளின் நீதத்துக்கும் பொருத்தத்திற்கும் விரோதமாக சிலசமயம் நடக்கக்கூடும். அப்படி நடந்தால் கடவுள் நம்முடைய இருதயத்தில் நம்மை நிந்திக்கிறார். அதனால் நம்முடைய மனம் கறுத்து, நம்முடைய ஆத்மதத்துவமாகிய மனோ பலம் அல்லது சித்த தத்துவம் மிகவும் குறைந்து போகின்றது. ஆதலால், நாம் உவந்ததைப் பிறருக்கும் உவக்க வேண்டும். நாம் உவக்காததைப் பிறருக்கு உவக்கக்கூடாது இந்த நியாயப் பிரமாணத்தைக் கடவுள் நம்முடைய சுபாவத்தில் படைத்திருக்கிறார். இதற்கு விரோதமாக நாம் நடக்கக்கூடாது.

மெஸ்மரிஸர்கள் அதிக உண்மையுள்ளவர்களாயும், நீதம் உள்ளவர்களாயும், சன்மார்க்கர்களாயுமிருக்க வேண்டும். இந்த வித்தையை வீண் விளையாட்டிற் காகச் செய்கிறதும் அவ்வளவு உசிதமல்ல. அனேகர் இதனை வீண் விளையாட்டுக்குச் செய்யக் கூடாது என்றே சொல்கிறார்கள். இதை நன்மையான காரியங்களுக்கேயல்லாது. தீமையான காரியங்களுக்கு உபயோகப்படுத்தக் கூடாது. இது வரையில் நாம் எழுதி வந்த சங்கதிகள் சிலருக்கு விளங்காது. இனி நாம் எல்லாருக்கும் விளங்கும்படி, மெஸ்மரிஸ வித்தை செய்கிற விதங்களைக் குறித்து எழுதப் போகிறோம்.

இந்த வித்தையை மூன்று விதமாகச் செய்யப்படுகிறது. முதலாவது **“இன்திக்கால்”** அல்லது **“இன் இக்காஸ்”** அதாவது நம்முடைய தத்துவத்தை ஒரு வஸ்தில் போடுவது, அல்லது செலுத்துவது அல்லது நம்முடைய ஆத்மாவை அதில் நிழலிட அல்லது பிரதிபலிக்கச் செய்தல். இதில் ஒருவனுக்கு நம்முடைய ஆத்ம தத்துவத்தை அளிக்கலாம். இன்னும் கூடுவிட்டுக்கூடு பாய்தல் அல்லது ஒரு சரீரத்தை விட்டு மற்றொரு சரீரத்தில் ஆன்மாவை புகுத வைத்தல், அல்லது சூட்சும சரீரம் எடுத்தல் முதலியவை இதைச் சேர்ந்தது.

இரண்டாவது. **“இன்ஜிதாப்”** அதாவது: ஒரு வஸ்தின் தத்துவத்தை நாம் இழுத்துக் கொள்வது. இதில் நாம் ஒருவன் உடைய ஆத்ம தத்துவத்தைப் பிடுங்கிக் கொள்ளலாம். இன்னும் ஹாழிராத்தென்னும் அழைப்பு– தேவதைகளை அல்லது இறந்து போன மனிதர்களைக் கூப்பிட்டுப் பேசுதல் இதைச் சேர்ந்தது.

மூன்றாவது, **“இத்திஹாத்”** அதாவது: ஒரு வஸ்தில் நாம் போய்க் கலந்து விடுவது. இதில் நாம் ஒரு வஸ்தைப் பல ரூபமாக மாற்றலாம். அல்லது நாம் பல ரூபமெடுக்கலாம். இது மிகவும் பெரிது இன்னும் ஒவ்வொரு வஸ்தின் மூலத்தையும் உணர்தல், பிரபஞ்சங்களுக்கு மூலமாகிய கடவுளில் கலந்து– படைக்க, அழிக்க, வளர்க்க வல்லமையடைதல் முதலியவை இதைச் சேர்ந்தது.

கர்னல் ஹென்ரியெஸ் துரை தாம் தூத்துக்குடியில் கொடுத்த லெக்சரில் சொல்லியிருக்கிறதாவது: தற்காலம் உள்ள இன்ஜினியர்கள், பெரிய பெரிய பாலங்களையும், ரயில்களையும், கப்பல்களையும் ஒரு ஊரைவிட்டு மற்றொரு ஊருக்குப் போகத் தயார் செய்கிறார்கள். ஆனால், முற்காலத்திலுள்ள பெரியோர்கள், நம்முடைய உட்சரீரத்தினால் ஒவ்வொரு இடமும் போகக் கூடியவர்களாக இருந்தார்கள். அது எவ்வளவு தூரமாயிருந்த போதிலும் அவ்விடத்துக்குச் சங்கதிகளைப் பார்க்கவும் அவ்விடத்தில் தன்னைக் காட்டவும் கூடியவர்களாயிருந்தார்கள். நாம் ரயிலில் உட்கார்ந்து கொண்டு ஒரு மணிக்கு அறுபது மைல் வீதம் பிரயாணம் செய்கிறது பெரிய காரியமா? அல்லது பிரபஞ்ச தத்துவங்களை நமது சித்தத்திற்குக் கீழ்படுத்தி, நம்முடைய வலுவான சித்தத்தைக் கொண்டு நமது சூட்சும சரீரத்தை, பூலோக முழுமையும் ஆகாயத்தில் ஒரு நொடிக்குள் சுற்றிவரச் செய்வது பெரிய காரியமா? ரஸாயன சாஸ்திரத்தைக் கொண்டு உயிரை சரீர சம்பந்தத்தை விட்டு நீக்கவும், அணுக்களை அணுக்களின் சம்பந்தத்தைவிட்டு விலக்கவும், அசைவற்ற அல்லது உயிர் அற்ற அணுக்களைத் திரும்பச் சேகரம் செய்யவும் கூடும்!

ஆனால் போன உயிரைத் திரும்பக் கொண்டுவர முடியாது. இன்னும் அந்த சாஸ்திரத்தினால், குலாப் அல்லது ரோஜாப்பூ இதழ்களின் அணுக்களை

உண்டாக்கலாம். ஆனால் திரும்ப அந்த அணுக்களினால் குலாப் புஷ்ப இதழ்களை உண்டாக்க ஏலாது. மற்றபடி முன்னிருந்த வாசனையும் அதில் உண்டாகாது. என்றாலும், முற்காலத்திலுள்ள பெரியோர்கள் தங்கள் சித்தத்தை எவ்வளவு வலுவாக்கி இருந்தார்கள் என்றால்: அவைகளைப் புதிதாக உற்பத்தியாக்கும் வல்லமையைக் கொண்டு, அவர்கள் ஆகாயத்தில் நின்றும் குலாப் புஷ்பத்தினால் மழை வருவிக்கச் செய்யக் கூடியவர்களாய் இருந்தார்கள். இன்னும் எந்த வாசனை வேண்டுமோ, அந்த வாசனைகளினால் தங்கள் வீடுகளை நிரப்பக் கூடியவர்களாயிருந்தார்கள். இன்னும் எவர்கள் இந்த விஷயத்தில் சந்தேகிக்கிறார்களோ, அவர்கள் தலையின் மீது புஷ்பம் வருஷிக்கச் செய்யக் கூடியவர்களாயிருந்தார்கள். இன்னும், இது மட்டுமல்ல, மற்றவர்களும் அவர்களிடத்தில் அந்த ஞானங்களைக் கற்றுக் கொண்டு, இந்தக் காலத்தில் நம்முடைய கண்களுக்கு முன்னாலும் (மேடம் பிளாவாட்ஸகி போன்றவர்கள்) அவ்வித அற்புதங்களைச் செய்திருக்கிறார்கள். இன்னும் சமஸ்கிருத பாஷையில் ஹெப்னாட்டிஸம் என்னும் வித்தைக்கு "**குபத் வித்தியா**"வென்றும், அற்புதம் செய்கிற மனோ தத்துவத்திற்கு "**இக்ஷா சக்தி**" என்றும் சொல்வதுண்டு. *(வளரும்)*

## *புனித கர்பலா நினைவேந்தல் நிகழ்ச்சி*

ஈரோடு ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை சார்பில் புனித கர்பலா நினேவந்தல் நிகழ்ச்சி, மர்ஹூம் கலீபா ஹாஜி. என். அப்துல் ஜப்பார் ஹக்கிய்யுல் காதிரி அவர்கள் நினைவரங்கில் 28.8.22 ஞாயிறு காலை 8.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரை நடைபெற்றது.

மௌலவி. ஷம்சுத்தீன் உலூமி அவர்கள் தலைமையில் காலை 9 மணிக்கு இமாம் ஹஸன் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹுமா மவ்லிது ஓதப்பட்டது. ராஜா முஹம்மது யாஸீனிய் கிராஅத்துடன் தொடங்கிய இந்நிகழ்வில் யு.ஏ.ஹெச். ஜாபர் அஹ்மது ஹக்கிய்யுல் காதிரி வரவேற்புரை வாசித்தார். பொறியாளர் எஸ்.ஆரிப் ஹக்கிய்யுல் காதிரி அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார். பஷீர் அஹ்மது ஹக்கிய்யுல் காதிரி அவர்கள் தொகுத்து வழங்கினார். முஹம்மது முஸ்தபா ஹக்கிய்யுல் காதிரி அவர்கள் கீதம் இசைத்தார்.

மௌலவி. ஏ. கலீலுர்ரஹ்மான் யாஸீனிய், கலீபா. எஸ்.ஹுஸைன் முஹம்மது ஹக்கிய்யுல் காதிரிய்யுல் மன்பயீ, கலீபா. திருச்சி. எம். சிராஜுத்தீன் ஹக்கிய்யுல் காதிரி பி.எஸ்.ஸி. ஆகியோர் சொற்பொழிவாற்றினர். என் அப்துல் காதர் நாசர் ஹக்கிய்யுல் காதிரி அவர்கள் நன்றியுரை கூறினார். அனைவருக்கும் தப்ரூக் உணவு வழங்கப்பட்டது. அனைத்து ஏற்பாடுகளையும் இளைஞர் அணியினர், எஸ்.காதர், சண்முகம், ஷரீப் அகமது, சிறப்பாகச் செய்திருந்தனர்.

# அதர்வண வேதத்தில் அண்ணலார்

1. "ஏதஸ மின்னந்தரே மிலேச்ச
ஆச்சார்யன ஸமஸ்வித
மஹாமத் இதிக்கியாத
சிஷ்ய சாகா ஸமன்வித
நிருபஷ்சேவ மஹாதேவ
மருஸ்தல நிவாஸினம்"

ஓர் அந்நிய நாட்டில் ஓர் ஆன்மீகச் சீர்திருத்தவாதி தன் சீடர்களுடன் வருவார். அவர் பெயர் **மஹாமத்.** அவர் பாலைவனத்தைச் சார்ந்தவராக இருப்பார். (பவிஷ்ய புராணம் பாகம் 3 சுலோகம் 3 சூத்திரம் 5-8)

2. "லிங்கச் சேதி சிகாஹீன
சுமச்சுறுதாரி ஸ்தூஷக
உச்சாலாபி ஸர்வபக்ஷீ
பவிஷ்யதி ஜனோமம்
முஸலை நைஸ் மஸ்கார"

அவர்கள் சுன்னத்துச் செய்வார்கள். தலையில் குடுமி இருக்காது. தாடிவைத்திருப்பார்கள். சப்தம் போட்டு அழைப்பார்கள். முஸ்லிம் (முஸலை) என்று அறியப்படுவார்கள். (பவிஷ்ய புராணம் பாகம் 3 சூத்திரம் 3 சுலோகம் 25)

3. "இதம் ஜன இபச்ருதி
நாராசம் ஸஸதவிஷியதே
ஷஷ்பீம் ஸஹஸ்ர நவதீம்
சசௌரம் அருஷ மேஷுதன்மஹே
உஷ்டிருயங்கலம் பிறவாஹினோ
வநூ மந்தோஹிர் தஸா
வத மர ரத் தஸயனீ
ஜிஹிவுதே திவ

ஏ பக்தர்களே! இதைக் கௌரவத்துடன் கேளுங்கள். புகழக் கூடியவர் 60,090 மக்கள் மத்தியில் தோன்றுவார் அவர் 20 ஆண் பெண் ஒட்டகங்களில் சவாரி செய்வார். அவர் மகத்துவம் சுவர்க்க லோகம் வரை பரவும்.........."

அதர்வணவேதம் 20 ஆம் காண்டம் 127-70 சூக்தம்

4. "அனஸவந்தா ஸக்பதிர் மாமஹே
மேகாவா சேதிஷ் ஷடோ

அஸுரோ பகோன
திறை விஷனோ, அக்னேத சாப்பி
ஸஹஸ்நிரர் வைச் சுவானர
திறையம் ருணாஷி சிகேத"

உண்மையாளரும் அறிவாளியும் பலசாலியுமான மாமஹே எனக்கு அருள்புரிவார். அவர் முழுமையானவர். முழு உலகுக்கும் அருட் கொடையானவர். 10,000 பேர்களுடன் புகழ்பெற்றவர். (ரிக்வேதம் மந்திரம் 5 சூக்தம் 28)

5. "அல்லோ ஜியோஷ்டம் பரமம் பூரணம்
பிரஹ்மாண்டம் அல்லாம்
அல்லோ ரஸூலா மஹாமத் கபரஸ்ய
அல்லோ அல்லாம் ஆதல்லா பூகமேகம்
அல்லா பூகனிவா தகம்
அல்லா பஞ்ஞென ஹுத ஹிறுத்தவா
அல்லா சூரிய சந்திர ஸர்வ நக்ஷீத்திரம்
அல்லா ரிஷீணாம சர்வதிவ்வியாம் இந்திராய
பூர்வம் மாயா பரமந்தரீஷா
அல்லா பிறுத்திய்யா அந்தரீஷம் விசுவரூபம்
இல்லாம் கபா இல்லாம் இல்லல்ல நீ இல்லல்லா!
ஓம் அல்லா இல்லல்லா அனாதிஸ்வரூபா
அத்தர்வணா சியாமா ஹும் ஹிரீம் ஜனான பகன
ஸித்தான் ஜலசாரன் அதிர்ஷ்டம்
குருகு ருபுட் ஸபாஸட ஸம்ஹாரீணி
ஹும் ஹறீம் அல்லா ரஸூல மஹமத
அல்லா அல்லா இல்லல்லே கபரஸ்யதி இல்லல்லா"

அல்லா (கடவுள்) முழுமையானவன். எல்லாப் பிரபஞ்சமும் அவனுடையது. சிவனின் ஸ்தானத்தை அலங்கரிக்கும் மஹாமத் அல்லாவுடைய தூதராக இருக்கிறார். அல்லா அல்லாம் (இறைவா! இறைவா!) பூமியை இயக்குகின்ற இறைவன் பூமியின் பரிபாலகனும் சிருஷ்டி கருத்தாவும் அவனே, இறைவன் ஒருவனேயன்றி வேறில்லை. அரூபியான இறைவனின் ஓங்கார நாதத்தைப் பாருங்கள். ஓம் ஹிரீம் மந்திரங்கள் அடக்கிய அதர்வண வேதத்தை இறக்கிய இறைவனே மக்களையும் பசுக்களையும் ஏனையவற்றையும் படைத்தான். அரூபியான அந்த ஆண்டவனையே துதி செய்யுங்கள். ஓம் ரீம் மந்திரம் மூலம் அசுரவர்க்கத்தை அழிக்கும் மஹாமத் அல்லாவின் தூதர். ஏக இறைவனைத்தவிர வேறு தெய்வமில்லை. (அல்லோப நிஷத் 1-10)

நூல்: இஸ்லாமும் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளும்- நன்றி)

*(சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் நபி வழி நம் வழி நூலிலிருந்து)*



# மதுரஸா

# நன்கொடை



**திண்டுக்கல்**

**ஜாஹிர் ஹூஸைன் மூலம்**

பாக்கம் கோட்டூர் **S.** பஜ்ருல் ஹக் மூலம் துஆ செய்ய ரூ. 1200 /- ம்,

கம்பம் **A.** ஹபீபா துஆ செய்ய ரூ. 501+500 /- ம்,

மதுரை சுமையா ரஹ்மத்துல்லா துஆ செய்ய ரூ. 561 /- ம்,

கிளியனூர் **A.** அப்துல் பத்தாஹ் கால் புண் விரைவில் ஆறி உடல்நலம் பரிபூரண சுகத்திற்கு துஆ செய்ய ரூ. 500+500+100+1000+100+100+5000 /- ஆக மொத்தம் ரூ. 7300 /- ம்,

மதுரை **K.** புதூர் **S.** சாகுல் ஹமீது துஆ செய்ய மாதாந்திர சதக்கா ரூ. 1000 /- ம்,

சென்னை **S.** சர்மிளா உசேன் துஆ செய்ய சதக்கா ரூ. 1000 /- + 500 /- ம்,

பாண்டிச்சேரி **M.** முஹம்மது அமீருத்தீன் துஆ செய்ய ரூ. 1000 /- ம்,

செக்கந்திரா பாத் சனோபர் நிஷா ஸலாத்துன் நாரியா ஓதி துஆ செய்யரூ. 500 /- ம்,

காரைக்கால் **R.A.** அப்துல் பாரூக் பாத்திமா குடும்பத்தார் அனைவரும் நலமுடன் வாழ துஆ செய்ய ரூ. 500 /- ம்,

பாக்கம் கோட்டூர் பேபி அயானா உடல் நலம் பரிபூரண சுகத்துடன் நீண்ட ஆயுளுடன் வாழ துஆ செய்ய ரூ. 500 /- ம்,

திண்டுக்கல் காலனி **R.M.** ஜீனத்து பஷீர் மகன் சதாம் உசேன் சதக்கா ரூ. 2000 /- ம்,

திண்டுக்கல் காந்தி கிராமம் **N.** பத்தூல் குடும்பம் சதக்கா ரூ. 600 /- ம்,

திண்டுக்கல் அப்துல் ஹாதி **C/O** ஜனுல் ஹக் துஆ செய்ய ரூ. 1500 /- ம்,

மடத்துக்குளம் சேக் அப்துல்லா துஆ செய்ய ரூ. 500 /- ம்,

திருச்சி **M.** முஹம்மது சகுபர் சாதிக் மகன் நாதிர் நல்வாழ்விற்கு துஆ செய்ய ரூ. 1000 /- ம்,

மேலத்திருப்பந்துருத்தி **S.** ராபியத்துல் பஸரியா அவர்களின் சிறிய தந்தை மர்ஹூம் அப்துல் ஹமீது அவர்களின் வருட பாத்திகாவை முன்னிட்டு துஆ செய்ய ரூ. 2000 /-

உத்தமபாளையம் பெயர் கூறாத அன்பர் ஹாஜத்துக்கள் நிறைவேற துஆ செய்ய சதக்கா ரூ. 501 /- ம்,

திண்டுக்கல் மர்ஹூமா சஹர்பான் பீவீ அவர்களின் 40- ஆம் நாள் பாத்திஹாவை முன்னிட்டு துஆ செய்ய ரூ. 1000 /- ம்,

எலந்தங்குடி அப்துல் லத்தீப் பயணம் நல்லபடியாக போக மற்றும் உடல் நலம் பரிபூரண சுகத்திற்கு துஆ செய்ய ரூ. 500 /- ம்,

பாக்கம் கோட்டூர் சஹானா பேகம் அயானா உடல் நலம் பரிபூரண சுகத்திற்கு துஆ செய்ய ரூ. 500 /- ம்,

**ரபீவுத்தீன் ஆலிம் மூலம்**

இளங்காகுறிச்சி மர்ஹூம் **P.** முஹம்மது சித்தீக் ரூ. 2000 /- ம்,

நெய்வேலி ஹமீதா ஸ்டோர்ஸ் ரூ. 1000 /- ம்,

நெய்வேலி **S.**பஷீர் அஹ்மது ரூ. 500 /- ம்,

புதுக்கோட்டை ஹாஜி சையது ஹுசைன் ரூ. 5000 /- ம்,

திண்டிவனம் **A.R.M.** எலக்ட்ரிக் ஹவுஸ் உண்டியல் மூலம் ரூ. 8250 / - ம்,

ஊத்துக்குளி அலீப் டெக்ஸ்டைல்ஸ் ரூ. 3500 /- ம்,

திருச்சி **A.** முஹம்மது அர்ஷத் ரூ. 500 /- ம்,

அதிராம்பட்டிணம் **S.** ஷர்புத்தீன் (துபை கேம்ப்) சிறப்பு உணவுக்காக ரூ. 15000 /- ம்,

விஜயகோபாலபுரம் நஜீமா/ ளியாவுத்தீன் ரூ. 1550 /- ம்,

திருச்சி நிஃமத் நிஸா ரூ. 950 /- ம்,

உத்தமபாளையம் **S.** உமர் பாரூக் ரூ. 8500 /- ம்,

பள்ளப்பட்டி **M.** அம்யா பேகம் ரூ. 500 /- ம்,

பள்ளப்பட்டி மர்ஹூம், மௌலவீ. அப்துல் மஜீது ஆலிம் தீன் சபீகா ரூ. 1000 /- ம்,

**மதுக்கூர்**

**N.** பசீர் அஹமது **S/O** நத்தர்ஷா நாட்டங்களும் தேட்டங்களும் நிறைவேறிட துஆ செய்ய ரூ. 500 /- ம்,

அடியக்க மங்கலம் மர்ஹூம் **S.S.** ஷாஜஹான் இவர்களுக்கு யாஸீன் ஓதி துஆ செய்ய ரூ. 2000 /- ம்,

**A.** நூர்ஜஹான் பீவி பூரண உடல் நலத்திற்கு துஆ செய்ய மாத சந்தாவாக ரூ. 500 /- ம்,

**M.** அப்துல் கலாம் நலத்திற்கு துஆ செய்ய நன்கொடையாக ரூ. 2000 /- ம்,

ஷாஜஹான் உண்டியல் சேர்த்த வகையில் ரூ. 600 /- ம்,

ஹாஜிமா **A.** சம்சுல் பீவி தனது கால்வலி நன்றாக துஆ செய்ய ரூ. 1000 /- ம்,

ஜமால் முஹம்மது நல்ல உடல் நலத்திற்கு துஆ செய்ய வேண்டி ரூ. 5000 /- ம்,

பெயர் சொல்ல விரும்பாத நன்கொடையாளர் துஆ செய்ய ரூ. 5000 /- ம்,

**M.A.** சாகுல் ஹமீது (சென்னை) பிள்ளைகளின் பிறை 9 இப்தார் உணவுக்காக ரூ. 5000 /- ம்,

**M.A.** தீன்ஷா (சென்னை) பிறை 10 செவ்வாய் கிழமை இப்தார் உணவுக்காக ரூ. 5000 /- ம்,

**N.** நத்தர்ஷா **S/O** நஜீய் பூரண உடல் நலம் வேண்டி துஆ செய்ய ரூ. 1000 /- ம்,

**M.** முகம்மது தாவூது ஹஸன் (ரலி) ஹுஸைன் (ரலி) இவர்களின் நினைவு தினத்திற்காக நன்கொடை ரூ. 500 /- ம்,

**M.** முகம்மது தாவூது ஸலாத்துன் நாரியா ஓதி துஆ செய்ய ரூ. 1000 /- ம்,

**K.O.P.** முகம்மது பாரூக் & தாஹீர் நாச்சியா இவர்கள் நிறைவான நல்வாழ்வுக்கு துஆ செய்ய மாத சந்தாவாக ரூ. 600 /- ம்,

**M.** அஹது பூரண நலத்திற்கு துஆ செய்ய ரூ. 11000 /- ம்,

இளையான்குடி ஹாஜி **M.S.** முஹம்மது பாரூக் அவர்களின் மகன் ஜெஹபர் புதிய வீடு கட்டி குடிபோக இருக்கும் வீட்டில் பரக்கத், விசாலமான நல்வாழ்விற்கும் துஆ செய்ய ரூ. 1000 /- ம்,

மதுரை **S.** ஜரினா பேகம் அவர்களின் கணவர் மர்ஹூம் **M.** சாகுல் ஹமீது (எ) ராஜாங்கம் அவர்களின் வருட பாத்திஹாவை முன்னிட்டு துஆ செய்ய ரூ. 1000 /- ம்,

மதுரை **S.** சாகுல் ஹமீது துஆ செய்ய மாதாந்திர சதக்கா ரூ. 1000 /-

சென்னை ஏழுகிணறு முஹம்மது முஹையத்தீன் உடல் நலம் பரிபூரண குணமடைய வேண்டி துஆ செய்ய சதக்கா ரூ. 501 /- ம்,

மயிலாடுதுறை ஹஸீனா நஸீம் குழந்தை பாக்கியம் வேண்டி துஆ செய்ய ரூ. 500 /- ம்,

திண்டுக்கல் பர்ஜானா- முகமது தமீமுல் அன்சாரி தம்பதியரின் குழந்தை **M.** சதீகா பாத்திமா நீண்ட ஆயுளும், நிறைந்த செல்வமும் பூரண சுகத்துடனும் ஒழுக்கத்துடனும் மற்றும் ஈமான் இர்பான் பெற்ற குழந்தையாகவும் ஷைகு நாயகம் அவர்களின் அருளாசி பெற்ற குழந்தையாக வாழ நிய்யத் செய்து அகீகா ஆடு ஒன்றுக்கு ரூ. 10000 /- ம்,

காரைக்கால் **R.A.** அப்துல் பாரூக் பாத்திமா குடும்பத்தார் அனைவரும் நலமுடன் வாழ துஆ செய்ய மாதாந்திர நன்கொடை ரூ. 500 /- ம்,

சங்கரன்பந்தல் நஜிரா அவர்களின் கால்வலி சரியாகி, உடல் நலம் பரிபூரண சுகத்திற்கும் துஆ செய்ய ரூ. 500 /- ம்,

கிளியனூர் **A.** அப்துல் பத்தாஹ் கால்வலி பரிபூரண சுகம் அடைந்து உடல் நலம் பரிபூரண சுகத்திற்கு துஆ செய்ய ரூ. 5000 /- ம்,

சென்னை **S.** சர்மிளா உசேன் துஆ செய்ய உணவுக்காக சதக்கா ரூ. 1000 /- ம்,

திண்டுக்கல் நாகைய கோட்டை **S.P.** சக்கரை பாவா அவர்கள் துஆ செய்ய உணவுக்காக ரூ. 5000 /- ம்,

திண்டுக்கல் காந்திகிராமம் **N.** பத்தூல் குடும்பம் சதக்கா ரூ. 900/- ம்,

பாக்கம் கோட்டூர் **S.** பஜ்ருல் ஹக் துஆ செய்ய ரூ. 500 /- ம்,

ஈரோடு **M.** அப்துல் கரீம் தனது ஹாஜத்துக்கள் நிறைவேற விரைவில் நல்ல வீடு கிடைக்க வேண்டி துஆ செய்ய ரூ. 500 /- ம்,

ஈரோடு **M.** ஜரினா பேகம் ஹாஜத் நிறைவேற பதுறு சஹாபாக்கள் திருநாமம் ஓதி துஆ செய்ய ரூ. 1500 /- ம்,

ஈரோடு மர்ஹூம் கலீபா, ஹாஜி **N.** அப்துல் ஜப்பார் அவர்களின் பெயரால் யாஸீன் ஓதி துஆ செய்ய ரூ. 1000 /- ம்,

உத்தமபாளையம் பெயர் கூற விரும்பாத அன்பர் பிரச்சனைகள் அனைத்தும் நீங்க நிய்யத் செய்து துஆ செய்ய ரூ. 500 /- ம், + ஹாஜதத்துகள் நிறைவேற துஆ செய்ய ரூ. 501 /- ம்,

மடத்துக்குளம் சேக் அப்துல்லா துஆ செய்ய ரூ. 500 /- ம்,

ஈரோடு **M.H.** ஜாவித் அகமதின் மனைவி மர்ஹிமா **A.** சபானா அவர்களுக்கு மஹ்ஃபிரத்திற்க்காக துஆ செய்ய ரூ. 3000 /- ம்,

ஈரோடு **M.** பைஜ் அகமது மகள் **F.** மிப்ரா பாத்திமா பிறந்த நாளை முன்னிட்டு நல்வாழ்விற்கு துஆ செய்ய ரூ. 1000 /- ம்,

வவ்வாலடி பரக்கத் நிஷா ஹாஜத்துக்கள் நிறைவேற துஆ செய்ய ரூ. 700 /- ம்,

திருச்சி மாவட்டம் சுனைப்புக நல்லூர் அப்துல்லாஹ் உடல் நலம் பெற வேண்டி நிய்யத் செய்து துஆ செய்ய ரூ. 2350 /- ம்,

வழுத்தூர் மர்ஹூம் அப்துல் ரஜாக் மஹ்ஃபிரத்திற்காக துஆசெய்ய ரூ. 1100 /- ம்,

சென்னை சனோபர் நிஷா ஸலாத்துன் நாரியா ஓதி துஆ செய்ய ரூ. 1000 /- ம்,

சென்னை **S.** சர்மிளா உசேன் ஸலாத்துன் நாரியா ஓதி துஆ செய்ய ரூ. 1000 /- ம்,

கம்பம் முஹம்மது அலி அவர்களின் மகன் அப்துல் ஹாதி நிய்யத் நிறைவேறியதை முன்னிட்டு துஆ செய்ய ரூ. 502 /- ம்,

சென்னை மேற்கு தாம்பரம் **Mrs.M.** பரீதா பானு வியாபார அபிவிருத்திக்கு ஸலாத்துன் நாரியா ஓதி துஆ செய்ய ரூ. 2000 /- ம்,

திண்டுக்கல் கலீபா. மௌலவி ஆலிம் புலவர் **S.** ஹுஸைன் முகம்மது மன்பயீ நிய்யத் நிறை வேறியதற்காக ரூ. 1600 /- ம்,

திண்டுக்கல் எஹ்ஸான் நிய்யத் நிறை வேறியதற்காக ரூ. 500 /- ம்,

திண்டுக்கல் அன்னை ஆட்டோ **A.** அந்தோணியம்மாள் வியாபாரத்தில் பரகத் வேண்டி பிராத்தனை செய்ய காணிக்கை ரூ. 500 /- ம்,

திண்டுக்கல் நாகல் நகர் பாத்திமா பஞ்சர் கடை **U.** நாகூர் மீரான் உண்டியல் சேமிப்பு ரூ. 1550 /- + உண்டியல் சேமிப்பு ரூ. 1450 /- ம்,

கிளியனூர் முஹம்மது ஃபஹிம் விரைவில் வேலை கிடைக்கவும் உடல் நலம் பரிபூரண சுகத்திற்கு துஆ செய்ய ரூ. 500 /- ம்,

**வழங்கினர். வழங்கிய வள்ளல்களின்**
**நாட்டங்கள் அனைத்தையும் அல்லாஹ் நிறைவேற்றியருள்வானாக!**

## முக்கிய அறிவிப்பு.

அன்புள்ள வாசகர்களே! நன்கொடையாளர்களே!

மதுரஸா நன்கொடை அனுப்புவோர் கீழ்க்காணும் வங்கிக்கணக்கில் பணம் செலுத்தி 9941057785 என்ற எண்ணில் ஜனாப்.எஸ்.ஐ. தவ்லத் ஹக்கிய்யுல் காதிரி அவர்களுக்குத் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**AWNIYYA WORLD PEACE TRUST. Canara Bank, Chennai Broad way Branch C.A.No. 1374201555699 IFS Coade CNRB 0001374**

சபை உள்ள ஊர்களில் செயலாளர்களிடம் செலுத்தும்போது அதன் விபரம் மறைஞானப்பேழையில் வெளியிடப்படுகிறது. சபை இல்லாத ஊர்களிலிருந்தோ, மதுரஸாவுக்கு நேரடியாகவோ, மணியார்டர் மூலமாக பணம் அனுப்பினாலோ 9944576165 என்ற வாட்ஸ் அப் எண்ணிற்கு விபரங்களை அனுப்பினால் மறைஞானப்பேழையில் வெளியிடலாம். *-மதுரஸா நிர்வாகம் -*

# முகரம் – சிகரம்

– தத்துவக் கவிஞர், பாவரசு இ. பதுருத்தீன்.

மாதங்களில் சிகரம்! – அது
மகத்துவமிக்க முகரம்!
ஆதங்கொள்ளாமல் ஏற்போம்
அதுவே மூமினுக்கு அகரம்!

நோன்புகள் வைத்தே மதிப்போம்! – உன்னை
நலமாய் உளத்தில் பதிப்போம்!
தான்புனிதமாக வாழ்வோம்! – உன்
தனித்துவம் உணர்ந்து சூழ்வோம்!

பூரணச் சந்திரன் போல – தொழில்
பொருந்திடும் யந்திரம் போல
காரண முகரம் கண்டோம்! – அதற்
காக மகிழ்ச்சியும் கொண்டோம்!



ஆண்டு பிறந்தது ஆண்டு – அது
1444 ஆம் புத் தாண்டு!
யாண்டும் இறையருள் கொண்டு – வாழ்வோம்
இப்புத் தாண்டுகள் கண்டு!

இதயக் குதிரை மீது – நல்
ஹிஜ்ரத் என்னும் தூது
உதய அரும்புத் தாண்டு! – நாம்
உளக்கம் கொண்டிறை வேண்டு!

Registered with R.N.I. No. TNTAM / 2009 / 27865
Postal Registration No. DDL / 08 / 2021 - 2023
Date of Publication on 7th, Posted on 10th, of Every Month at H.P.O. Dindigul












Owned by Awniyya World Peace Trust Published by
J. Mohamed Rahmathulla B.A.B.Com.,Fakira Complex, 74, Palani Road,
Dindigul - 624001.Printer : R.VijayalakshmiPrinted at
Sri Agni Amman Printers,52, Palani Road, Near Sakthi Theatre, Dindigul - 624001.
Editor S. Hussain Muhammad Manbayee